## அரசின் நிதிக்கூற்றுக்கள் - 2022

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொது திறைசேரியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான/ மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அரசின் நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக்கூற்றுக்களுக்கு உரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 செப்தம்பர் 18 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, இதனுடன் சமர்ப்பிக்கப்படும் அரசின் நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக அறிந்து கொள்வதற்காகவன்றி, உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,
(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பின்வரும் அவதானிப்புகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | கணக்காய்வு அவததானிப்பு | பரிந்துரைகள் |
|---|---|---|
| 1.6.1 (அ) (v), (viii), (x), (xiv) மற்றும் (xv) | வெளிநாட்டுக் கடன்களை கணக்கு வைத்தல் | அரச கடன் பெறுவனவு மற்றும் கடன் சேவைப்படுத்தல் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| 1.6.1(இ) (i) மற்றும் (ii) | வெளிநாட்டுக் உதவிகளை கணக்கு வைத்தல் | கிடைத்துள்ள இனைத்து வெளிநாட்டு மானியங்கள் அரசின் நிதிக்கூற்றுக்களில் சரியாக உள்ளடக்கப்பட வேண்டும். |
| 1.6.1. (உ) | வாடகை மற்றும் முற்பணங்கள் | நிதிககூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதிகள் உரிய ஏனைய நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடப்பட வேண்டியமை. |
| 1.6.1 (ஊ) | திறைசேரியின் அங்கீகரிக்கப்பட்ட முற்பணங்கள் | செயலிழந்த கணக்குகளில் காணப்படும் மீதிகள் பரீட்சிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| 1.6.1 (எ) (ii) | நிதியல்லாத சொத்துக்கள் | அரசின் அனைத்து சொத்துக்களும் கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |
| 1.6.1 (ஏ) | செயற்பாடற்ற கணக்குகள் | நீண்ட காலமாக காணப்படும் மீதிகள் தொடர்பில் பரீட்சித்து நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதிகள் மாத்திரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 1.6.1 (ஐ) | நிதி நிலைமைக்கூற்று மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்று ஆகியவை வேறுபட்டுக் காணப்பட்டமை. | நிதி நிலைமைக்கூற்று மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்று ஆகியவற்றுக்கிடையில் நிலவ வேண்டிய தொடர்ப உறுதிப்படுத்தப்பட வேண்டியமை. |
| 1.6.1 (ஓ) | நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள் | சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| 1.6.1 (ஓ) | சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் வகைப்படுத்தல் | - மேற்படி - |
| 1.6.1 (க) | மொத்த சொத்துக்களினை விட மொத்த வெளிவாரி பொறுப்புகள் அதிகரித்தமை | அரசிற்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் கணக்கு வைப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| 1.6.1 (கா) | வெளிநாட்டு பயன்பாட்டு கொடுக்கல் வாங்கல்கள் | சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| 1.6.1 (கி) | பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு இல்லாதிருந்தமை. | - மேற்படி - |
| 1.6.1 (கீ) | எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியம் | - மேற்படி - |
| 1.6.1 (கு) | அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் | - மேற்படி - |

**1.6 நிதிக்கூற்றுகள் தொடர்பான கருத்துரைகள்**

**1.6.1 அரசின் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பிலான கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று ஆகியவற்றுக்கிடையே நேரடியான தொடர்பொன்று காணப்படவில்லை. அதாவது நிதிச் செயலாற்றல் கூற்றின் | 2021 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் கடந்த சில ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்ட மாதிரியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், | நிதி நிலைமைக் கூற்று மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்று ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் தனியாக மீளாய்வாண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்திற்குரிய உண்மையான நிலைமையின் பிரதிபலிப்பொன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ஆண்டுக்குரிய பற்றாக்குறையொன்று அல்லது மிகையொன்று கணிப்பிடப்பட்டு அந்த பற்றாக்குறை அல்லது மிகை நிதி நிலைமைக்கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் நிதி நிலைமைக்கூற்று ஒன்றுக்கொன்று வேறுபட்டுக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் கணக்கியல் கட்டமைப்பு மற்றும் கணக்கியல் நியமங்களின் பிரகாரம் கணக்குகளைத் தயாரிக்கும் போது கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட நிலைமை சரிசெய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (ஆ) | நிதி நிலைமைக்கூற்றின் நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்களின் கூட்டுத்தொகையாக ரூபா 22,477,362,524,574 ஆன வரவு மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிமை மூலதனிலான மாற்றங்கள் கூற்றில் ரூபா 149,436,599,992 ஆன செலவுப் பெறுமதியொன்று மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்போது உரிமை மூலதனம் தொடர்பில் நேரடியாக மற்றும் பொருண்மையாக தாக்கமளிக்கும் தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கின் வரவு மீதியான ரூபா 22,626,799,124,566 பெறுமதி உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேறிய சொத்துக்கள் சீராக்கல் கணக்கு நியதிச்சட்ட அல்லது ஏனைய நிதியமொன்றாக கருதப்படாத காரணத்தால் அது மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்படவில்லை. எவ்வாறா போதிலும், தேறிய சொத்துக்களிலான சீராக்கல் கணக்கிற்கு உரிய பெறுமதி நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 27 இன் கீழ் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோருக்கு உரிய தகவல்கள் வெளிப்படுத்தப்படும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடங்கியுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாததாக வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லைல. இதன் காரணமாக நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோருக்கு மற்றும் அது தொடர்பில் அக்கறையுடைய தரப்பினருக்கு எதிர்வரும் வருடத்தில் அரசினால் செலுத்தி தீர்க்கப்பட வேண்டிய வெளிவாரிப் பொறுப்புகள் தொடர்பில் தெளிவான அபிப்பிராயமொன்றை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் கணக்கீட்டு கட்டமைப்பு மற்றும் கணக்கியல் நியமங்களின் பிரகாரம் கணக்கு முறைமைகளை மேம்படுத்தும் போது உரிய வகைப்படுத்தலை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோருக்கு உரிய தகவல்கள் வெளிப்படுத்தப்படும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மொத்த வெளிவாரி பொறுப்புகளின் பெறுமதி ரூபா 27,281,161,967,904 ஆன போதிலும், அதற்கு ஒப்பாக மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,803,799,443,330 மாத்திரமானமையால் மொத்த சொத்துக்களை விட மொத்த வெளிவாரிப் பொறுப்புகள் ரூபா 22,477,362,524,574 இனால் விஞ்சியிருந்தது. | அரசாங்கத்திற்குச் சொந்தமான நிதி அல்லாத சொத்துக்களின் மொத்த மதிப்பு இன்னும் முழுமையாகக் கணக்கிடப்படவில்லை. மேலும், அரசாங்க பொறுப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பணத்தைப் பயன்படுத்தி பெறப்பட்ட அல்லது நிர்மாணிக்கப்பட்ட சில சொத்துக்கள் அந்தந்த அரசாங்க நிறுவனங்களின் நிதிககூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ளன. பொது முயற்சிகள் உட்பட முழு பொதுத்துறைக்கான ஒருங்கிணைந்த கணக்குகளை தயாரிக்கும் போது இந்த நிலைமை தீர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | அரசுக்கு சொந்தமான சொத்துக்கள் அனைத்தையும் கணக்கு வைப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | அரசின் நிதிக்கூற்றினுள் காணிகள், புத்துருவாகும் பணிகள் நீங்கலாக ரூபா 775,918 மில்லியன் கூட்டுப் பெறுமதியுடைய நிதியல்லாத | அரசாங்கத்திற்குச் சொந்தமான அனைத்து நிதியல்லாத சொத்துக்களையும் இனங்கண்டு கணக்கீடு | நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோருக்கு உரிய தகவல்கள் வெளிப்படுத்தப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களுக்காக அந்த சொத்துக்களின் பெறுமானத் தேய்விடக்கூடிய பெறுமதி அதன் பயன்படு ஆயுட்காலம் முழுவதும் கிரமமான முறையில் ஒதுக்கீடு செய்து விவேகமான கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்படு ஆயுட்காலம் கழிக்கப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கமைய இந்த சொத்துக்களின் திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் திரண்ட அழிவுநட்டம் காணப்படின் அது கழிக்கப்பட்ட பின்னர் கிடைக்கும் கொண்டுசெல்லும் பெறுமதி (Carrying amount) தொடர்பில் அரசின் நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோருக்கு திட்டவட்டமான அறிவினை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | செய்யும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது, அந்த செயல்முறை முடிந்ததும், முன்மொழியப்பட்ட கணக்கீட்டு கட்டமைப்பு மற்றும் கணக்கியல் நியமங்களின அறிமுகப்படுத்திய பிறகு, அது பொருத்தமான தேய்மானக் கொள்கையை (Depreciation Policy) அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. | வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஊ) | அரசின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள காசுப்பாய்ச்சல்கூற்றின் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலினுள் மானியங்களாக ரூபா 33,405,049,463 உள்ளடங்கியிருந்த போதிலும், அந்த பெறுமதியினுள் காசு உட்பாய்ச்சலொன்று அல்லாத ரூபா 19,487,743,093 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | பொருட்கள் மற்றும் உபகரணங்களாக கிடைக்கும் வெகுமதிகளின் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் காசுப் பாய்ச்சலொன்றாக குறிப்பிடப்பட்ட போதிலும், அதற்குரிய செலவினங்களும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சலாக உள்ளடக்கப்பட்டுள்ளமையால் இதன் மூலம் காசுப்பாய்ச்சல் மீதியில் | கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மானியங்களாக பெறுவனவுகள் உள்ளடங்கியிருந்தது. | தாக்கமொன்று இல்லை. | |
| (எ) | மீளாய்வாண்டினுள் ரூபா 45,000,000,000 ஆன உள்நாட்டு மற்றும் கால அடிப்படையிலான கடன் மீதியொன்று திறைசேரி உண்டியல்களாக மாற்றப்பட்டிருந்ததுடன், அதன்போது எதுவித காசுப்பாய்ச்சலும் உருவாகவில்லை. எவ்வாறான போதிலும், அது மீளாய்வாண்டினுள் இடம்பெற்ற காசுப்பாய்ச்சலாக கருதி நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றில் வரவு செலவுத்திட்ட நிதியீட்டத்தின் கீழான உள்நாட்டுக் கடன் பெறுவனவுகள் மற்றும் வைப்புகள் மற்றும் பொறுப்புக்களினது தேறிய மாற்றங்களினுள்ளும் உள்ளடங்கியிருந்தது. | திறைசேரி உண்டியல்களாக மாற்றப்பட்டிருந்த ரூபா 45 பில்லியனான உள்நாட்டு கடன் காசுப்பாய்ச்சலான்றாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், காசு வெளிப்பாய்ச்சலின் கீழும் குறித்த மீதி காண்பிக்கப்பட்டுள்ளமையால் அதனூடாக காசுப்பாய்ச்சல் மீதியில் தாக்கமொன்று இல்லை. | கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2020 ஆம் ஆண்டின் போது, காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலினுள் உள்ளடங்கியிருந்த வைப்புக்கள் மற்றும் ஏனைய பொறுப்புகளின் தேறிய மாற்றங்களின் பெறுமதி, 2021 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு உரிய காசுப்பாய்ச்சல்களினுள் தனித்தனியாக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அந்த பெறுமதிகளில் உள்ளடங்கியுள்ள காசுப்பாய்ச்சல்கள் திரண்ட நிதியத்தினுள் உள்ளடங்கியிருந்ததுடன், அதன் காரணமாக வைப்புக்கள் மற்றும் ஏனைய | வைப்புக்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் தேறிய மாற்றங்களின் பெறுமதி 2021 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு காசுப்பாய்ச்சல் வகைப்படுத்தலினுள் தனித்தனியாக காண்பிக்கப்பட்டது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முன்மொழிவின் அடிப்படையில் ஆகும். மேலும், உருப்படியொன்று காசுப்பாய்ச்சலினுள் உள்ளடக்கப்படுவது என்பது திரண்ட நிதியத்தில் உள்ளடக்கப்படுவது அல்ல. நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 24 இன் பிரகாரம், காசுப்பாய்ச்சல் கூற்றின் காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் | அடிப்படை கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புக்களின் பெறுமதிகளிலான தேறிய மாற்றங்கள் திரண்ட நிதியத்திற்கு சேர்ப்பனவாக சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டினுள் வைப்புகள் மற்றும் பொறுப்புகளினுள் தேறிய மாற்றங்களாக ரூபா 294,583,038,486 திரண்ட நிதியத்திலிருந்து அகற்றுதலாக (Reverse) பதிவு செய்யும் அரசியலமைப்பின் 150(1) உறுப்புரையுடன் முரண்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | திரண்ட நிதியத்தின் மீதி ஆகியவற்றுக்கிடையேயான இணக்கக்கூற்று மாத்திரம் என்பதுடன், காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ள அனைத்து உருப்படிகளும் திரண்ட நிதியத்தில் ஒருபோதும் கணக்கு வைக்கப்படுவதில்லை. அதற்கமைய, வைப்புக்கள் மற்றும் ஏனைய பொறுப்புகள் நிதி வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் உட்பாய்ச்சல்களின் உள்ளடங்கியுள்ள போதிலும், அவற்றின் தேறிய மாற்றங்கள் திரண்ட நிதியத்திற்கு உரித்தற்றது என்பதால் திரண்ட நிதியத்தின் மீதியை அண்மிக்கும் போது குறித்த பெறுமதியான ரூபா 294,583,038,486 அகற்றப்பட்டுள்ளது. இது ஒருபோதும் கணக்கு பதிவொன்று (Accounting Entry) அல்ல. | |
| (ஐ) | திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்திற்கு எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்திலிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,022,280,600 தொகை 2022 ஆம் ஆண்டின் அரசின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமைக்கூற்றின் பொறுப்பொன்றாக மறைப் பெறுமதியொன்றாக காண்பிக்கப்பட்டு நானாவித கணக்குகளின் கீழ் எரிபொருள் விலை உறுதிப்பாட்டு கணக்காக பெயரிடப்பட்டு தவறுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்தக் கணக்கு ஒரு பொதுப் பேரேடு கணக்காக இருப்பதால், இது நிதிக்கூற்றுக்களில் பல்வேறு கணக்குகளின் கீழ் காட்டப்படும். எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் மிகவும் நியாயமான சமர்ப்பத்தலுடன் (Fair Presentation) தொடர்புடைய உருப்படி எவ்வாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதைக் கணக்காய்வு சுட்டிக்காட்டினால், அதற்கேற்ப தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு நான் ஒப்புக்கொள்கிறேன். | நிதிக்கூற்றுக்களில் தகவல் துல்லியமாக உள்ளிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் இலங்கை மத்திய வங்கியின் இலாபங்களிலிருந்து அரசாங்கத்திற்கு சாட்டுதலாக்கப்பட்டிருந்த ரூபா 30,007,245,202 ஆக காணப்பட்டதுடன், இலங்கை மத்திய வங்கியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 31,035,788,000 ஆகும். அதற்கமைய ரூபா 1,028,542,798 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | இலங்கை மத்திய வங்கியிருந்து 2021 ஆம் ஆண்டின் இலாபம் அரசுக்கு சாட்டப்பட்டதாக 2022 ஆம் ஆண்டினுள் உள்ளபடியாக கிடைத்த தொகை ரூபா 30 பில்லியனாக காணப்பட்ட அந்த தொகை கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | இலாப பெறுவனவுகள் குறித்து நிறுவனத்துடன் ஆண்டின் இறுதியில் இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | பொது முயற்சிகளுக்கு வழங்கப்பட்டிருந்த அரசின் மீண்டெழும் மானியங்கள் மற்றும் மூலதன மானியங்கள், குறித்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதிகளுடன் ஒப்பிடும் போது தேறிய பெறுமதி முறையே ரூபா 38.5 மில்லியன் மற்றும் ரூபா 16.52 மில்லியனால் குறைத்து அரசின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உங்களால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்கள் சரியாக கணக்கு வைத்தல் மற்றும் அவற்றை அந்த நிறுவனங்களில் நிதி கூற்றுகளில் காண்பிக்கும் பொறுப்பு அந்த நிறுவனங்களின் கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் அதனுடன் தொடர்புடைய அமைச்சுக்களின் பிரதான கணக்கிட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். | வழங்கப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களின் பெறுமதிகள் நிதி ஆண்டின் இறுதியில் உரிய நிறுவனங்களுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 வெளிநாட்டு அரச கடன்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய, 2022 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டுகளினுள் அல்லது அதற்கு முன்னர் தீர்வையான போதிலும் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டு | ஏற்றுக் கொள்கின்றேன். திரைசேரியினால் கடன் தீர்வை அறிக்கை உடனடியாக குறித்த அமைச்சு மற்றும் செயற்திட்டத்திற்கு உரிய | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் |

| | | | |
|---|---|---|---|
| | கடன்களின் பெறுமதி முறையே ரூபா 10,665.4 மில்லியன் மற்றும் ரூபா 3.6 மில்லியன் ஆகும். அவ்வாறான போதிலும், திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தினால் சமர்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் நிலவிய அன்னிய செலாவணி மாற்று வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வினால் மேற்கொண்ட கணிப்பீடுகளுக்கமைய இவ்வாறு கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டுக் கடன்களின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மொத்த பெறுமதி ரூபா 11,700.6 மில்லியன் ஆகும். அதற்கமைய ரூபா 1,031.5 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, மீளாய்வாண்டினைப் போன்றே இதற்கு முன்னைய ஆண்டுகளிலும் தீர்வையாகியுள்ள போதிலும் கணக்கு வைக்கப்படாத கடன் பெறுமதிகள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலவுவதாக மேலும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டு கடன் பணத்தை பயன்படுத்தி ஏதேனும் செலவினமொன்று காணப்பட்டால் அந்த செலவினம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காது காணப்படக்கூடும் என்பது தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது. | செலவினங்களை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வப்போது நினைவுறுத்தல் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன . எவ்வாறான போதிலும், போதிய அளவு வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு இல்லாது இருந்தமை அல்லது ஏனைய காரணங்களின் அடிப்படையில் அமைச்சு / செயற்திட்டத்தினால் செலவினங்கள் உறுதிப்படுத்தப்படாமையால் அதனுடன் தொடர்புடைய கடன் பொறுப்புக்களும் கணக்கு வைக்க முடியாது காணப்பட்டது. கணக்கு வைக்கப்படாத வெளிநாட்டு கடன் பெறுமதி மொத்த வெளிநாட்டு கடன்களில் 0.09 சதவீதம் ஆகும். | இடம்பெற வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டினுள் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளினுள் தீர்வையாகியுள்ள நிதி நிலைமைக்கூற்றிற்கு புறம்பாக பேணிச் செல்லப்பட்ட 21 கடன் வகைகளுக்குரிய ரூபா 17,305.2 மில்லியனான தீர்வையாதல்கள் மீளாய்வாண்டினுள் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் அரசின் நிதிக்கூற்றுக்களில் எதுவித வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கமைய காலரீதியான எண்ணக்கருவிற்கு மாற்றமாக குறித்த வருடத்தினுள் தீர்வையாகிய போதிம், அந்த வருடத்தினுள் சில வெளிநாட்டுக் கடன்கள் கணக்கு வைக்கப்படாமை தொடர்ந்தும் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிஜர்வரும் வருடங்களில் உரிய முறையில் வெளிப்படுத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் அரசின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 30(11) இன் பிரகாரம் | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் CS- | அரசின் கடன் பெறுவனவுகள் |

| | | | |
|---|---|---|---|
| | கடன் இலக்கம் 2001042 கடனுக்குரிய ஆரம்ப மீதி 5,644,462 யூரோக்களாக குறிப்பிடப்பட்டிருந்த போதும், ஆண்டினுள் எதுவித தீர்வையாதலும் அல்லது மீள் செலுத்தலும் இல்லாது 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக இந்த கடன் மீதி 6,702,014 யூரோக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. | DRMS கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மேம்படுத்தல்கள் இடம் பெற்ற போது ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு 2021 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டுள்ளதுடன் குறித்த திருத்தம் நிதிக்கூற்றுகளில் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. | கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |
| (ஈ) | அரசாங்கத்தினால் 2021 ஆம் ஆண்டின் போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கடப்பாடுகளின் கீழ் 2021007 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைக்குரிய 854-1 அறிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்படியாக காணப்பட்ட கணக்கு வைக்கப்படாத ரூபா 589 மில்லியனான கடன் மீதி 2022 ஆம் ஆண்டினுள் நடப்பாண்டின் தீர்ப்பனவொன்றாக கருதி கணக்கு வைக்கப்பட்டிராததுடன் அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய அரசின் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 11 இல் மற்றும் குறிப்பு இலக்கம் 30(II) இல் மீளாய்வாண்டினுள் உள்ளபடியான தீர்வையாதல்கள் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் வருடங்களில் உரிய முறையில் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |
| (உ) | அரசின் நிதிக்கூற்றுக்களினுள் நிதி நிலைமைக் கூற்றிலிருந்து முழுமையாக புறம்பாக பேணிவரப்பட்ட 08 கடன் வகைகளுக்குரிய ரூபா 518,293 மில்லியனான கடன் மீதி மீளாய்வாண்டினுள் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் அரசின் நிதிக்கூற்றுக்களில் எதுவித வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், குறித்த 08 வகையான கடன்களின் மீதிகள் நேரடியாக குறிப்பு இலக்கம் 30(II) இன் இறுதி மீதியினுள் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த கடன் மீதிகள் நீதிகூற்றுகளில் பதிவு செய்யப்பட்டதுடன் எதிர்வரும் வருடங்களில் இவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் தனி தனியாக வெளிப்படுத்த குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |
| | (i) அரசாங்கத்தினால் கடன் பெறுவனவுகள் திரண்ட நிதியத்தின் | உரிய நிதியாண்டினுள் வரவு செலவுத் திட்ட | அரசின் கடன் பெறுவனவுகள் |

| | | | |
|---|---|---|---|
| | ஊடாக கணக்கு வைக்கப்படல் பொதுவான நடைமுறையொன்றான போதிலும், மேற்குறிப்பிடப்பட்ட 08 வகையான கடன் வகைகள் திரண்ட நிதியத்தின் ஊடாக கணக்கு வைக்கப்பட முடியாதாக காணப்பட்ட போதிலும், இந்த 08 வகையான கடன் வகைகளுக்குரிய கடன் தவணைகள் திரண்ட நிதியத்தின் ஊடாக செலுத்தப்பட்டிருந்தது. | பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்கு ஒதுக்கீட்டு அதிகாரச் சட்டத்தின் கீழ் கடன் பெறுதல் இடம்பெற்ற காரணத்தால் திரண்ட நிதியத்தின் ஊடாக கணக்கு வைத்தல் அவசியமற்றது.<br><br>இந்த 08 கடன் உடன்படிக்கைகளில், ஹம்பாந்தோட்டை துறைமுகம் (2017 முதல்) மற்றும் நொரொச்சோல் நிலக்கரி மின் நிலையத் திட்டங்களுக்காக பெறப்பட்ட கடன்களுக்கான தவணை செலுத்துதல் கூட்டு நிதியின் ஊடாக மேற்கொள்ளப்பட்டதுடன், மத்தள விமான நிலைய அபிவிருத்தி திட்டத்திற்காக பெறப்பட்ட கடன்கள் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனியின் நிறுவனத்தின் கீழ் கடன் சேவைப்படுத்தல் இடம்பெற்றது. | கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |
| (ii) | இந்த 08 வகையான கடன் வகைகளை பெற்று மேற்கொள்ளப்பட்ட எதுவித செலவினமும், கடன் பெற்றுக்கொள்ளப்பட்ட காலப்பகுதியினுள் அல்லது வேறு ஏதேனும் காலப்பகுதியினுள் அரசின் நிதிக்கூற்றுக்களில் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதுடன் இந்த கடன்களை பெற்று சுவீகரிக்கப்பட்ட எந்த சொத்தும் அரசின் நிதிக்கூற்றுக்களில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் இந்த 08 கடன் உடன்படிக்கைகளின் கீழான பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் கூறிய பகுதியளவு அரசு நிறுவனங்களின் நிதி கூற்றுகளில் பதிவு செய்யப்பட்ட காரணத்தால் அரசு நிதி கூற்றுகளில் செலவினம் ஒன்றாக கணக்கு வைத்தல் அவசியம் அற்றது. | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கடந்த வருடத்தில் இரண்டு கடன் உடன்படிக்கைகளுக்காக அரசின் நிதிக்கூற்றுக்களில் வேறுபட்ட பயன்பாட்டு நாணய அலகுகள் பயகன்படுத்தப்பட்ட காரணத்தால் குறித்த கடன் மீதியில் ரூபா 340 மில்லியன் மற்றும் ரூபா 285 மில்லியனால் CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையின் பிரகாரம் மாற்றமடைந்திருந்தது. எவ்வாறான போதிலும் மீளாய்வாண்டின் போது இந்த இரு கடன் மீதிகளுக்குரிய ஆரம்ப மீதிகளின் கடன் பயன்பாட்டு நாணய அலகின் வகை மாத்திரம் மாற்றப்பட்டிருந்த போதிலும் ஆரம்ப மீதிகள் திருத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய குறித்த மாற்றங்கள் அந்த கடன் தொகை காரணமாக மீளாய்வாண்டினுள் பதிவு செய்யப்பட்ட செலாவணி மாற்ற நட்டத்தினுள் உள்வாங்கப்பட்டிருந்தது. அதற்கமைய அந்த கடன் மீதிகள் இரண்டிற்குரிய அரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையின் பிரகாரம் செலாவணி மாற்ற நட்டமாவதுடன் அந்த பெறுமதிகளில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது. | உரிய கடன் உடன்படிக்கைகள் இரண்டிற்கு உரிய 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான கடன் மீதி, கடன் பயன்பாட்டு பண அலகில் (Loan Currency) நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2022.12.31 திகதியில் உள்ளபடியான றித்த சரியான செலாவணி மாற்று வீதத்தின் அடிப்படையில் 2022.12.31 திகதி நிலவிய கடன் பொறுப்புக்கள் இலங்கை பணத்தில் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |
| (எ) | கடன் இலக்கம் 2019010 இற்கு உரியதாக மீளாய்வாண்டினுள் 500,000 யூரோக்கள் கிடைத்திருந்த போதிலும் CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 114,180,500 ஆக காணப்பட்டதுடன், அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 148,497,550 ஆகும். அதற்கமைய நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெறுமதி ரூபா 34,317,050 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |
| (ஏ) | அரசின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்க 30(II) இல் உள்ளடக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயன்பாட்டு நாணய அலகிற்கமைய ஆரம்ப கடன் மீதிக்கு மீளாய்வாண்டினுள் தீர்வையாதல்கள் சேர்க்கப்பட்டதன் பின்னர் மற்றும் மீளாய்வாண்டினுள்ளான கடன் செலுத்தல்கள் கழிக்கப்பட்டதன் பின்னர் | இந்த மாற்றங்களுக்கு தாக்கமளித்துள்ள விடையங்கள்,<br>• CSDRMS கட்டமைப்பின் தொழில்நுட்ப கோளாறு.<br>• கடன் தொகை USD | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதி கடன் மீதிக்கு சமனாக வேண்டிய போதிலும், அவ்வாறு சமனாகாத 12 கடன் உடன்படிக்கைகளுக்குரியதாக ரூபா 1,327,324,971 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இல் XDR இற்கு மாற்றும் போது ஏற்பட்ட செலாவணி மாற்ற சீராக்கம்.<br>• கடன் வழங்கியவரின் மீதியுடன் ஒப்பிடும் போது ஏற்பட்ட வேறுபாடுகள் போன்றவை குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (ஐ) | அரசின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்க 30(I) இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயன்பாட்டு நாணய வங்கி அலகு செயற்திட்டக் கடன் மீதி (Foreign Currency Banking Unit Loan (Project) Balances) CS-DRMS 2000+Report 854-1 அறிக்கையுடன் பரீட்சிக்கப்பட்ட போது இரு கடன் உடன்படிக்கைகளுக்குரிய 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான ஆரம்ப மீதிகளின் ரூபா 94,064,888 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் கடன் மீள் செலுத்தலின் போது கடன் உடன்படிக்கை இலக்கம் 2018034 இற்குரிய ஐ.அ.டொ. 454,444 ஆன அவேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், கடன் உடன்படிக்கை இலக்கம் 2016002 இற்கு உரிய ரூபா 2,978,950 தொகையானது சராசரி/சீராக்கல் (Parity/Adjustments) நிரலில் சீராக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் இதுவித வெளிப்படுத்தலும் நிதிக்கூற்றுக்களில் இடம்பெற்றிருக்கவில்லை. | 2018034 இந்த கடன் இலக்கத்திற்கு உரியதாக 2021 நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது கடன் மீள செலுத்துவதற்கு உரிய கடன் பயன்பாட்டு நாணய அலகான (Loan Currency) ஐக்கிய அமெரிக்க டொலர் 454,443.37 தொகையானது தவறுதலாக பதிவு செய்யப்படாதிருந்த காரணத்தால் அந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் நிதி கூற்றுகளில் இது திருத்தப்பட்டுள்ளது.<br><br>2016002 கடன் உடன்படிக்கை இலக்கத்திற்கு உரியதாக ரூபா 2,978,950 தொகை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் 2021 ஆம் ஆண்டு கடன் வட்டியாக கருதி CS-DRMS கட்டமைப்பு நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கடன் வளங்களுடன் மீதிகள் ஒப்பிடப்பட்டு அது கடன் மீள் செலுத்தலாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதனால், 2022 ஆம் ஆண்டின் நிதி கூற்றுகளில் ஒப்பிடும்போது சீராக்கங்களின் கீழ் திருத்தப்பட்டு மீதி திருத்தப்பட்டுள்ளது. | |
| (ஒ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலவிய வெளிநாட்டு கடனை உள்நாட்டு பயன்பாட்டு நாணய அலகிற்கு மாற்றும் போது ரூபா 5,232,909 மில்லியனான செலாவணி மாற்று நட்டமொன்று கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பெறுமதி தேறிய சொாத்துக்கள் சீராக்கல் கணக்கிற்கு (Net Assets Adjustment) சீராக்கப்பட்டிருந்தது. மேலும், கடந்த ஆண்டின் செலாவணி மாற்று நட்டம் ரூபா 363,647 மில்லியனானதுடன், மீளாய்வாண்டினுள் அது ரூபா 5,232,909 மில்லியனான காரணத்தால் கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் 1,339 சதவீதமான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |
| (ஓ) | வெளிநாட்டுக் கடனுடன் தொடர்படைய நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 30(ii), (iii) மற்றும் (iv) இன் பிரகாரம் கணிப்பீட்டினுள் மீளாய்வாண்டின் போது மீள செலுத்தப்பட்ட கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 348,629 ஆன போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 358,504 ஆக காணப்பட்டமையால் ரூபா 9,874 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையின் பிரகாரம் அந்த பெறுமதியானது ரூபா 369,825 மில்லியனாக அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |
| (ஔ) | நிதிச் செயலாற்றல் கூற்றினுள் குறிப்புகளினூடாக உள்நாட்டு கடன் மீள் செலுத்தல்களுக்கு உரியதாக தகவல் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட வெளிநாட்டு கடன் மீள்செலுத்தல் பெறுமதியான ரூபாா 358,504 மில்லியனுக்குரியதாக அவ்வாறானதொரு பதிவு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை குறிப்பு இலக்கம் 30(i) முதல் 30(iv) வரை வெளிநாட்டு கடன் மீள் செலுத்தல் உள்ளடக்கப்பட்டு தனியானதொரு பதிவாக காண்பிக்கப்படவில்லை. | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | வழங்குநர்களால் அனுப்பப்பட்டிருந்த கடன் மீதி உறுதிப்படுத்தல்கள், அரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணனி மயப்படுத்தப்பட்ட கடன் முகாமைத்துவ தொகுதியின் 854-1 அறிக்கையுடன் ஒப்பிடப்பட்ட போது 07 கடன் வகைகளுக்குரியதாக மீதி ரூபா 7,607,493,758 அதிகமாகவும், 37 கடன் வகைகளுக்குரியதாக ரூபா 13,082,627,225 குறைவாகவும் அரசின் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் தீர்வையான போதிலும் கணக்கு வைக்கப்படாத கடன் மீதிகள் காணப்பட்ட காரணத்தால் கடன் இலக்கம் 2014030, 2019020, 2018003 மற்றும் 2016019 இன் 2022.12.31 ஆந் திகதிய நிதி கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகள் மற்றும 854-1 அறிக்கையில் மீதி ஆகியவற்றுக்கு இடையே வேறுபாடு நிலவுகின்றது. | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |
| (கா) | கடன் வழங்கிய நிறுவனங்களிடமிருந்து கிடைத்த கடன் மீதி உறுதிப்படுத்தல்களை பரிசோதிக்கும் போது சில கடன் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களில் செலுத்த வேண்டிய அர்ப்பணிப்புக் கட்டண நிலுவையான (Commitment Fee due) 82,158 யூரோக்களும், தாமத வட்டியாக (Delay Interest) 31,571 யூரோக்களும் செலுத்த வேண்டிய கட்டணமாக (Fees Overdue) 194,391 யூரோக்களும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட சில கடன் கொடுப்பனவுகள் இடைநடுவில் நிறுத்தப்படும் போது பின்பற்றப்பட வேண்டிய கொள்கைக்கு இணங்க, தாக்கத்திற்கு உள்ளான வெளிநாட்டு கடன் சேவை படுத்தல் 2022.04.12 ஆந் திகதி முதல் இடைக்காலத்தில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அதற்கு அமைய செலுத்தாத அர்ப்பணிப்பு கட்டணம் மற்றும் தண்டப்பன வட்டி கடன் மீதி உரிய கடன் கொடுத்தோரால் உறுதிப்படுத்தும் கடிதங்களில் செலுத்த வேண்டிய கட்டணங்களாக காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த கடன் தொடர்பில் 854-1 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளின் செலுத்தாத கடன் தவணை மாத்திரம் உள்ளடங்கியுள்ளது. | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |
| (கி) | கொடுப்பனவு பிற்போடப்பட்ட காலப்பகுதியை கருத்திற்கொள்ளும் போது 2022 ஆம் | இந்த அனைத்து நலனாளிகளும் 2022 ஆம் | அரசின் கடன் பெறுவனவுகள் |

ஆண்டுக்கு உரியதாக பிற்போடப்பட்ட வெளிநாட்டுக் கடன் 2023 மே 02 ஆந் திகதி அச்சிடப்பட்ட கணனி மயப்படுத்தப்பட்ட கடன் முகாமைத்துவ தொகுதியின் 814-1 அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட போதிலும், 2023 சனவரி 20 ஆந் திகதி அச்சிடப்பட்ட அவ்வறிக்கையில் உள்ளடங்கியிருகவில்லை என்பது அவதானிக்கப்பட்டதுடன், அதற்கமைய தேறிய பெறுமதி ரூபா 27,392 மில்லியனான வெளிநாட்டுக் கடன் அரசின் நிதிக்கூற்றுக்களிலும் தீர்வையாகிய கடனாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த கடன் மீதிகளிடையே 2023 மே 02 ஆந் திகதி அச்சிடப்பட்ட அவ்வறிக்கையின் தீர்வையாதல்கள், 2023 சனவரி 20 ஆந் திகதி அச்சிடப்பட்ட அறிக்கையை விட குறைவாக அறிக்கையிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

ஆண்டுக்கு உரிய 2022 ஜனவரி 20 ஆம் திகதியின் பின்னர் தரவு கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டமையால் ஏற்பட்ட கொடுப்பனவு என்பதால், 2023 ஜனவரி 20 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட 814-1 அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. தீர்வையாதல் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு தாமதமாக கிடைத்தமை தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கடன் கொடுத்தோருக்கு அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் உரிய அந்நிய செலாவணியை சரியாக கடன் சேவைப்படுதலை எதிர்வு கூறுதல் இடம்பெறுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் முகாமைத்துவ நடைமுறைக்கு அமைய தீர்வையாதல் பிற்போடல் கட்டமைப்பிற்கு உள்ளடக்கப்படுவது உரிய கடன் கொடுத்தோரால் குறிப்பிட்ட செலாவணி மாற்று வீதத்தில் எமக்கு அனுப்பப்படும் தீர்வையாதல் பிற்போடல் குறிப்புகளில் இருந்து மாத்திரம் என்பதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்களை குறைத்துக் கொள்வதற்கு ஒவ்வொரு வருடத்திற்கும் உரிய அனைத்து கொடுக்கல் வாங்கல்களுடன் கூடிய அறிக்கைகள் இணைய வழி மென்பொருள் வசதிகள் வழங்கப்பட்டிராத மற்றும் அவ்வாறான நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு கட்டணம்

கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும்.

அறவிடாத கடன் கொடுத்தோரிடமிருந்து ஒவ்வொரு வருடத்தினரும் ஜனவரி 01 ஆன் திகதி அழைப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அந்த குறிப்புகள் கிடைத்தமையால் இந்த தாமதங்கள் தொடர்பில் தொடர்ந்தும் கடன் கொடுத்தோருக்கு அறிவுறுத்தல் மேற்கொள்ளப்படுகிறது.

(கீ) வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் வெளிநாட்டு கடன் முகாமைத்துவத்திற்காக பேணிச் செல்லும் கணனி மயப்படுத்தப்பட்ட CS-DRMS தொகுதியின் அறிக்கையை பகுப்பாய்வு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(i) 2021008 ஆம் இலக்க மற்றும் 2021016 ஆம் இலக்க கடன்களுக்காக 2021 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட CS-DRMS தொகுதியின் 854-1 பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதிகள் பதிவு செய்யப்பட்டிராத போதிலும், 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட அந்த அறிக்கையினுள் 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்படியாக பின்வருமாறு ஆரம்ப மீதிகள் அவதானிக்கப்பட்டன.

| கடன் இலக்கம் | கடன் பண வகை | கடன் தொகை | பெறுமதி ரூபா |
|---|---|---|---|
| 2021008 | USD | 392,385 | 78,647,303 |
| 2021016 | USD | 12,500 | 2,505,423 |

இந்த கடன் உடன்படிக்கைகள் இரண்டு தொடர்பிலும் தீர்வையாதல் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திற்கு 2022 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதற்கு அமைய 2022 டிசம்பர் மாதம் கணக்கு பொழிப்புகளின் மூலம் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும்.

அவ்வாறே, அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக மேற்படி இரு வகையான கடன்களுக்காக ஆரம்ப மீதிகள் காணப்படாததுடன், மீளாய்வாண்டினுள் தீர்வையாதல்களாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் கணக்கு வைக்கப்பட்டிருந்தன. அதற்கமைய இந்த கடன் பெறுவனவுகள் எந்த வருடத்திற்குரியவை என்பது தெளிவாகவில்லை.

| கடன் இலக்கம் | கடன் பண வகை | தீர்வையான கடன் தொகை | பெறுமதி ரூபா |
|---|---|---|---|
| 2021008 | USD | 392,385 | 78,280,893 |
| 2021016 | USD | 472,500 | 168,106,589 |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2002054 ஆம் இலக்க கடனுக்குரிய 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான கடன் மீதி 11 யூரோக்கள் அல்லது ரூபா 2,495 மாத்திரமாக காணப்பட்டதுடன், இந்த கடன் தொகைக்கு உரியதாக மீளாய்வாண்டின் போது எதுவித கடன் தீர்வையாதலும் இல்லாது 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக குறித்த கடன் மீதி 4,373 யூரோக்கள் அல்லது ரூபா 1,692,045 ஆக காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |
| (iii) | இரு கடன் உடன்படிக்கைகள் தொடர்பில் ரூபா 1,803,456 கூட்டுத்தொகையான மறை கடன் மீதிகள் அரசின் நிதிக்கூற்றுக்களில் மற்றும் CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கையில் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். 2023 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (iv) | இரு கடன் உடன்படிக்கைகளுக்கு உரியதாக ரூபா 24,945,542 கூட்டுத்தொகையான மறை கடன் தீர்வையாதல்கள் அரசின் நிதிக்கூற்றுக்களில் மாத்திரம் அவதானிக்கப்பட்டதுடன், அந்த மீதிகளுக்கு உரியதாக CS-DRMS தொகுதியின் 854-1 அறிக்கை பிரகாரம் கடந்த வருடத்தின் இறுதி மீதிகள் மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,936,975,642 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். செயற்திட்டம் நிறைவடைந்த காரணத்தால் கடன் வழங்குநரால் அனுப்பப்பட்ட தொகையில் செலவிடப்படாது எஞ்சியுள்ள பணத்தை திருப்பி அனுப்பிய காரணத்தால் இந்த மறை கடன் பெறுமதி தீர்வையாகியுள்ளது. | அரசின் கடன் பெறுவனவுகள் கடன் சேவை படுத்தல் கணக்கு வைக்கப்படல் உரிய முறையில் இடம்பெற வேண்டும். |

### 1.6.3 நிதியல்லாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 1,850,007 ஆன போதிலும் 2022 ஆம் ஆண்டின் அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த பெறுமதி ரூபா 1,802,121 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய நிதியல்லாத சொத்துக்களில் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 47,886 மில்லியனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022.09.02 இல் அங்கீகரிக்கப்பட்ட 2022 இன் 21 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அதுவரை காணப்பட்ட இராஜாங்க அமைச்சின் செலவின தலைப்பு இலக்கம் 104, 114, 115, 159 மற்றும் 169 இரத்து செய்யப்பட்டதுடன் அவற்றின் விடயப் பரப்புகள் ஏனைய அமைச்சுக்களின் கீழ் ஒப்படைக்கப்பட்டது. அதற்கமைய இரத்து செய்யப்பட்ட செலவின தலைப்பின் கீழ் 2022.09.30 ஆந் திகதியில் கணக்கு வைக்கப்பட்டிருந்த நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி உரிய பணிகள் ஒப்படைக்கப்பட்ட புதிய அமைச்சு/ அமைச்சரவைக்கு | நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதிகள் கடந்த வருடத்தின் இறுதி மீதியுடன் ஒப்பிடப்பட்டு அதற்கான காரணங்கள் காணப்படும் எனின் அவை தொடர்பில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சாட்டப்பட்டமையால் ஆரம்ப மீதிகளில் வேறுபாடு ஒன்று காணப்படுகிறது. | |
| (ஆ) | மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 84 நிறுவனங்களின் சில நிறுவனங்களின் நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 38,245 மில்லியனாக காணப்பட்டதுடன், அந்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் ஏ.சீ.ஏ – 6 மாதிரிக்கமைய அந்த மீதி ரூபா 21,382 ஆக காணப்பட்ட காரணத்தால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரசின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 16,863 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள திறைசேரி நிதி கூற்றுக்களின் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்களின் பெருமதிக்கு சமனான பெறுமதி அரசு நிதி கோற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த பெறுமதியை விட குறைவான அல்லது கூடிய பெறுமதியுடன் தொகைகளை அறிக்கையிட்டமை தொடர்பில் உரிய நிறுவனங்கள் கணக்காய்வின் போது திட்டவட்டமான தெளிவுபடுத்தலை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும் என்பதுடன், நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதிகளின் கணக்கீட்டு ரீதியான சரியான தன்மையை பேணுவதற்கு உரிய அறிக்கையிடும் நிறுவனங்களின் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | அனைத்து நிதி அல்லாத சொத்துக்களும் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 84 நிறுவனங்களின் சில நிறுவனங்களின் நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 6,277 மில்லியனாக காணப்பட்டதுடன், | அரசின் இறுதி நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ள நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதி ஒவ்வொரு | அனைத்து நிதி அல்லாத சொத்துக்களும் அரச நிதி கூற்றுகளில் உரிய முறையில் |

| | | | |
|---|---|---|---|
| | அந்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் ஏ.சீ.ஏ – 6 மாதிரிக்கமைய அந்த மீதி ரூபா 7,829 ஆக காணப்பட்ட காரணத்தால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரசின் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,552 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | செலவின அழகினாலும் அரச கணக்குகள் திணைக்களத்தினால் தரவு கட்டமைப்பிற்கு தமது நிறுவனத்தின் நீதி அல்லாத சொத்துக்களின் கட்டுப்பாட்டு கணக்கின் மீதியுடன் தனிப்பட்ட சொத்து மீதிகளை இணக்கம் செய்து அறிக்கையிட்ட பெறுமதிகள் மாத்திரம் உள்ளடங்கியுள்ளது. எனினும் அவ்வாறு கட்டுப்பாட்டு மீதியுடன் தொடர்ந்தும் இனங்காத சொத்துக்கள் அந்த நிறுவனத்திற்கு உரியதாக காணப்படக்கூடும் என்பதுடன், அவற்றின் இனங்காத மற்றும் தொடர்ந்து அறிக்கையிடப்பட வேண்டிய சொத்துக்கள் சிகாஸ் கணினி கட்டமைப்பில் உள்ளடக்குவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | கணக்கு வைக்கப்பட வேண்டியவை. |
| (ஈ) | மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 2 நிறுவனங்களின் 2022 ஆம் ஆண்டிற்குரிய ஏ.சீ.ஏ – 6 மாதிரியில் நடப்பாண்டினுள் மதிப்பீடு செய்யப்பட்டு ஆரம்ப மீதிகளுக்கு சீராக்கம் செய்யப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி மற்றும் விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடங்கியுள்ள பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 344 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | அரசின் காணிகள் மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் கணக்கு வைத்தல் தொடர்பில் உரிய நிறுவனங்களை இணைப்புச் செய்தல் அரச கணக்குகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் போது விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஏதேனும் காணி அல்லது கட்டிடம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்ட பின்னர் அந்த | அனைத்து நிதி அல்லாத சொத்துக்களும் அரச நிதி கூற்றுகளில் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டியவை. |

| | | |
|---|---|---|
| | பெறுமதியும் சிகாஸ் கணினி கட்டமைப்பின் ஊடாக கணக்கு வைக்கப்பட்டதாக உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படுவதுடன் அவற்றின் பெறுமதி சரியாக கணக்கு வைத்தல் அந்த நிறுவனங்களுக்கு உரிய பொறுப்பாகும். | |

### 1.6.4 வாடகை மற்றும் பணி முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் மற்றும் தலைப்பு 247 - இலங்கை சுங்கத் திணைக்களத்தின் ஆரம்ப (2021 திசெம்பர் 31) வாடகை மற்றும் பணி முற்பண மீதி முறையே ரூபா 8,518,925 மமற்றும் ரூபா 780,000 ஆக பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டின் போது அந்த திணைக்களங்களின் நிதிக்கூற்றுக்களில் வாடகை மற்றும் பணி முற்பணக் கணக்கின் ஆரம்ப மீதிகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அரசின் நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ளது திறைசேரியில் புத்தகங்களில் உரிய நிறுவனங்களினால் கணக்கு வைக்கப்பட்டுள்ள மீதிகள் ஆகும். | அரசின் நிதிக்கூற்றுகளில் உள்ளடங்கியுள்ள பெறுமதிகள் உரிய ஏனைய நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.5 மூலதனப் பங்களிப்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரசின் கூட்டுத்தாபனங்கள் மற்றும் பங்குடமையுள்ள பொது முயற்சிகள் மற்றும் அரச கம்பனிகள் 13 இனால் சமமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த நிறுவனங்களின் மூலதனப் பங்களிப்பு ரூபா 985,745 மில்லியனாக காாணப்பட்டதுடன், அரசின் | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகின்றேன். | பொது முயற்சிகளுக்கு வழங்கப்படும் மூலதன பங்களிப்பு உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 149,875 மில்லியனாக காணப்பட்ட காரணத்தால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசின் நிதிக்கூற்றுக்களினுள் மூலதனப் பங்களிப்பு ரூபா 835,870 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சமர்ப்பிக்கப்பட்ட நேரடி மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் அரசின் நிதிக்கூற்றுக்கள் ஆகியவற்றுக்கடையே 07 நிறுவனங்களுக்குரிய அரசாங்கத்திற்குரிய பங்குகளின் எண்ணிக்கையில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. அதற்கமைய, 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரசின் மூலதனப் பங்களிப்பு ரூபா 1,877 மில்லியன் குறைத்து அரசின் நிதிக்கூற்றுக்களில் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகின்றேன். உரிய திருத்தங்கள் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படவுள்ளது. | பொது முயற்சிகளுக்கு வழங்கப்படும் மூலதன பங்களிப்பு உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | 02 அரச கம்பனிகளின் உரித்தினை கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயரளவு பெறுமதி ஆகியவற்றுக்கமைய கணக்காய்வின் போது மேற்கொண்ட கணிப்பீடுகளுக்கமைய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெறுமதி ரூபா 5,148 மில்லியனான போதிலும், அது அரசின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 14,556 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அரசின் | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகின்றேன். உரிய திருத்தங்கள் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படவுள்ளது. | பொது முயற்சிகளுக்கு வழங்கப்படும் மூலதன பங்களிப்பு உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் ரூபா 9,408 மில்லியன் அதிகரித்து மூலதனப் பங்களிப்பு காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | பிரதேச அபிவிருத்தி வங்கியின் மூலதனப் பங்களிப்பு Capital Adequacy (Tier 1) அபிவிருத்தி செய்வதற்காக அதற்கு முன்னதாக லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 175 மில்லியனான பொது திறைசேரிக்கு செலத்த வேண்டிய கடன் தொகை ஈடுசெய்யப்பட்டு 2022 திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி ரூபா 175 மில்லியன் பெறுமதியான 6,183,946 பங்குகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அது 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அரசின் நிதிக்கூற்றுக்களில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகின்றேன். | பொது முயற்சிகளுக்கு வழங்கப்படும் மூலதன பங்களிப்பு உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | அரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினுள் அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சிகளின் மூலதனப் பங்களிப்பு அதிகரித்தமை ரூபா 1,405,204 மில்லியனாக ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் ரூபா 109,625 மில்லியன் அல்லது 8 சதவீதம் ஒவ்வொரு நிறுவனங்களுக்கு மீண்டெழும் தன்மையிலான அதாவது கடன் மற்றும் கடன் வட்டி செலுத்தல்கள் மற்றும் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்காக பொது திறைசேரியினால் விடுவிக்கப்பட்ட பணத்தை கொண்டிருந்தது. | பொது திறைசேரி இந்த நிறுவனங்கள் அனைத்தினதும் தனி உரிமையாளர் ஆகும். அதற்கு அமைய இந்த நிறுவனங்களில் நிலவும் செயற்படு மூலதனப் பிரச்சினைகள் அல்லது ஏனைய மெண்டலும் தன்மையான செலவினங்களுக்காக பொது திரைசறியின் பங்களிப்பு அந்த நிறுவனங்களுக்கு மேற்கொள்ளப்படும் மூலதன பங்களிப்பாக கருதப்பட்டுள்ளது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | பொது முயற்சிகளுக்கு வழங்கப்படும் மூலதன பங்களிப்பு உரிய முறையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.6.6 வெளிநாட்டு மானியம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 சனவரி 01 திகதியளவில் இலங்கை அரசாங்கத்திற்கு வெளிநாட்டு மானியமாக கிடைத்துள்ள போதும் 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாது செயலற்று காணப்பட்ட வெளிநாட்டு மானிய பெறுமதி ரூபா 34.9 மில்லியனானது. | வெளிநாட்டு நன்கொடைகளாக கிடைக்கும் பணம் உரிய நோக்கத்திற்கு அல்லது உரிய செயல் திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகின்றதா என்பதை ஆராய்தல், இந்த திணைக்களத்தில் விடயப்பரப்பிற்கு புறம்பான பணி ஒன்றாவது உடன் அது தொடர்பில் நேரடியாக செயல்படுவது தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகும். எவ்வாறான போதிலும் உரிய வைப்பு கணக்குகளில் நிலவும் மீதி செயற்திட்டத்திற்கு பயன்படுத்துமாறு அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு உரிய பணிகளை மேற்கொள்ளுமாறு அவ்வப்போது உரிய நடைமுறைப்படுத்தும் நிறுவனத்திற்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கும் வெளிநாட்டு நன்கொடைகளை உச்சமாக பயன்படுத்தி உரிய நோக்கத்திற்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியவை. |
| (ஆ) | 1994 ஏப்ரல் 20 திகதிய இலக்கம் 30/94 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம், வெளிநாட்டு மானியம் தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதும், மாதிரி பரிசோதனையின் மீது | சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு நன்கொடைகள் தொடர்பில் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பொது திறைசேரியின் அனுமதி | சுற்றறிக்கை அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெற்றுக் கொண்ட தகவல்களின் பிரகாரம், 2022 ஆண்டினுள் அவ்வாறு பொது திறைசேரியை அறிவூட்டாது ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களிற்கு 20 கருத்திட்டங்களிற்காக கூட்டுத் தொகை ரூபா 1,837,321,420 ஆன வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக கிடைத்திருந்ததுடன் அப் பெறுமதிக்கு ஏற்பாடு பெற்றுக் கொண்டு நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இன்றி அமைச்சு, திணைக்களம் ஆகியவற்றுக்கு நேரடியாக வெளிநாட்டு நன்கொடைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு நேரடியாக கிடைக்கும் வெளிநாட்டு நன்கொடைகள் உரிய வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளை மேற்கொண்டு நிதிக்கூற்றுகளில் உள்ளடக்குவதற்கு அறிக்கையிடல் அவற்றை செயல்படுத்தும் நிறுவனங்களின் பொறுப்பாகும். எனினும் இவ்வாறான நிலைமையை தவிர்ப்பதற்கு பொது திறைசேரி அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தவாறு உள்ளது. | |

### 1.6.7 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 2022 ஏப்ரல் மாதம் 12 திகதி வெளியிடப்பட்ட இடைக்கால வெளிநாட்டு கடன் செலுத்துவதை இடைநிறுத்தும் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பிரகாரம் 2022 ஏப்ரல் மாதம் 13 திகதி முதல் மீளாய்வாண்டு இறுதித் திகதிக்கு 391 கடன் உடன்படிக்கைகளிற்கு உரிய கடன் தவணைகளாக ரூபா 671,569 மில்லியனும் | எதிர்வரும் வருடங்களில் உரிய முறையில் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துபவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டிய அனைத்து தகவல்களும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன் வட்டி ரூபா 305,435 மில்லியனும் செலுத்துவதை இடைநிறுத்தியிருந்த போதும் அது தொடர்பாக மற்றும் இடைக்கால வெளிநாட்டு கடன் செலுத்துவதை இடைநிறுத்தும் கொள்கை ரீதியான தீர்மானம் தொடர்பாக அரசின் நிதிக்கூற்றுக்களில் எவ்வித வெளிப்படுத்தல்களும் செய்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 2022 ஆண்டினுள் உடன்படிக்கை செய்த போதும் கிடைக்காத ரூபா 10,200 மில்லியனான 02 வெளிநாட்டு கடன்கள் தொடர்பாக அரசின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட கடன் இலக்கம் 2022008 மற்றும் 2022003 ஆகியவற்றுக்கு ரூபா 10,200 மில்லியன் தொகை 2022 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்படாததுடன் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 854-1 அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துபவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டிய அனைத்து தகவல்களும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | அரசின் உரிமை பங்களிப்பு கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் மேற்கொண்ட முதலீடு மற்றும் பட்டியலிடப்படாத கம்பனிகளில் மேற்கொண்ட முதலீடாக வகைப்படுத்தியிருக்கவில்லை. மேலும் கொழும்பு பங்குச் சந்தையில் | அரசின் உரிமை பங்களிப்பு கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் மேற்கொண்ட முதலீடு மற்றும் பட்டியலிடப்படாத கம்பனிகளில் மேற்கொண்ட முதலீடாக வகைப்படுத்தப்பட வேண்டும் என எமக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் நிலவும் சட்ட ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பிரமாணங்கள் தொடர்பில் எமது திணைக்களத்திற்கு அறிவுறுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். | நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துபவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டிய அனைத்து தகவல்களும் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் உரிமையின் பெறுமதி அவற்றின் பெயரளவு பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், அவற்றின் 2022 திசெம்பர் 31 திகதியிலான சந்தை பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளில் உரிமையாண்மையில் சந்தை பெறுமதி நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கு 2023 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 1.6.8 எல்லைகள் மீறப்படுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 இன் இலக்கம் 12 கொண்ட அரச நிதிமுகாமைத்துவ (பொறுப்பு) (திருத்திய) சட்டம் பிராகரம், பிணைமுறி விநியோகிக்கும் எல்லை முன்னைய இரண்டு நிதியாண்டுகளுடன் மீளாய்வாண்டு நிதியாண்டிற்காக மொத்த தேசிய உற்பத்தியின் ஒட்டுமொத்தத்தின் சதவீதம் 15 சதவீதமாகும். அதன் பிரகாரம் 2022 ஆண்டிற்குரிய ரூபா 2,826,300 மில்லியன் எல்லையினுள் பிணைமுறி விநியோகிக் வேண்டிய போதும் ரூபா 2,908,515 மில்லின் வரை பிணைமுறி விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டினுள் ரூபா 82,214 மல்லியன் திறைசேரி பிணைமுறிகள் எல்லையை விஞ்சி விநியோகிக்கப்பட்டிருந்தது, அது 15.4 சதவீதமானது. | 2022 மார்ச் மாதம் முதற்கால பகுதியில் இருந்து செலாவணி மாற்று வீதம் அசாதாரணமான முறையில் அதிகரித்த காரணத்தால் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு ஒப்பாக இலங்கை ரூபாய் 80 சதவீதத்தால் பெறுமதி இழந்த காரணத்தால் திறைசேரி பிணை முறிகளின் எல்லை 2022.12.31 திகதி அதன் உச்ச எல்லையை மிஞ்சியது . | 2021 இன் 12 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ (பொறுப்புகள்) (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் திறைசேரி பிணை முறிகளை வெளியீடு செய்யும்போது எல்லைகள் பின்பற்றப்பட வேண்டும். |

### 1.6.9 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரை | 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாது அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மீது எரிபொருள் விலை உறுதிப்பாட்டு நிதியத்தை ஸ்தாபித்து பேணிச் செல்லப்பட்டிருந்தது. | பதில் கிடைக்கவில்லை. | அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) (i) | 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டம் | 2021 இன் 12 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) அதிகாரச்சட்டத்தினால் மற்றும் 2013 இன் இலக்கம் 15 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) (திருத்தம்) அதிகாரச்சட்டத்தினால் திருத்திய 2003 இன் இலக்கம் 3 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) அதிகாரச்சட்டம் பிரகாம், ஏதேனும் ஆண்டு இறுதியில் காணப்பட முடியுமான உச்ச பொறுப்பு பெறுமதி அவ்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் 80 சதவீதத்தை விஞ்சக்கூடாத போதும் 2022 திசெம்பர் 31 திகதி அவ் எல்லை 114.83 சதவீதம் வரை விஞ்சியிருந்தது. விபரம் பின்வருமாறு.<br><br>**பொறுப்புக்கள்** / **2022 திசெம்பர் 31 திகதியன்று பொறுப்புக்கள்** | 2022 ஆம் ஆண்டில் செலாவணி மாற்று வீதத்துக்கு ஒப்பாக இலங்கை ரூபாய் 80 சதவீதத்தினால் பெறுமதி இழந்தமை மற்றும் அமைச்சரவை பத்திர இலக்கம் 22/0154/604/014 மற்றும் 2023.01.20 ஆம் திகதிய தீர்மானத்தின் பிரகாரம் அரசுக்கு சொந்தமான முயற்சிகள் இனங்காணப்பட்டு 8 கடன் உடன்படிக்கைகளுக்கு உரிய அரசின் நிதி கூற்றுகளின் சாட்டப்பட்ட காரணத்தால் 2022.12.31 திகதியில் உள்ளபடியான வெளிநாட்டு கடன் மீதி ரூபா 518 பில்லியனாக அதிகரித்துள்ளது. மேலும், உள்நாட்டு | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | பெறுமதி ரூபா பில்லியன் |
|---|---|
| வங்கி மேலதிக பற்று | 84 |
| மத்திய வங்கி முற்பணம் | 235 |
| அரசாங்க கடன்கள் நிதிக்கூற்றுக்களினூடாக கணக்கீடு செய்யப்படாத பொறுப்பு | 27,379 |
| - கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன்- | 39 |
| மொத்த பொறுப்புக்கள் | 27,737 |
| மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி | 23,843 |
| **மொத்த பொறுப்புக்கள் மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக** | **116.33** |

* பொது திறைசேரியின் பிணைமுறி மீது அரச முயற்ச்சிகள் மூலம் பெற்றுக் கொண்டுள்ள கடனிற்காக வங்கிக்கு வழங்கியுள்ள பிணைமுறி மற்றும் நிவாரணக் கடித பெறுமதியான ரூபா 1,292 பில்லியன் மற்றும் அமைச்சு, திணைக்களம் மற்றும் விஷேட செலவு அலகுகளில் கணக்காய்விற்கு சமர்ப்பித்த பொறுப்புக்கள மற்றும் கடப்பாடுகள் கூற்று பிரகாரம் ரூபா 106 பில்லியன் பெறுமதியான பொறுப்புக்கள் மேற்குறிப்பிட்ட பொறுப்புக்களிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கடன் இருப்பு அதிகரித்தமையும் ஒட்டுமொத்த கடன் மீது அதிகரிப்பிற்கு தாக்கம் அளித்துள்ளது. மேலும் மேற்படி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ரூபாய் 884 பில்லியன் ஆக காணப்படும் இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்தின் கடன் மீதி அரச கடன் இருப்பிற்கு உள்ளடக்கப்பட்டமையும் இவ்வாறு அரச கடன் மீதி அதிகரித்தமைக்கு காரணமாக அமைந்திருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ii) | ‘‘2006 ஆண்டிறுதியில் வரவுசெலவுத் திட்ட இடைவெளி, அவ் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்ஞாததாக மற்றும் அம் மட்டத்தை அதன் பின்னர் தொடர்ந்து பேணிச் செல்வதற்கு பொறுப்பேற்று அரச கடனை தூரநோக்கு மட்டம் வரை குறைத்தல்’’ அரசாங்கத்தினால் கடைபிடிக்க வேண்டிய பொறுப்புவாய்ந்த நிதி முகாமைத்துவத்திற்கு அடிப்படையான நோக்கமாக 2003 இன் இலக்கம் 3 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 3(அ) பிரிவில் காட்டப்படுகிறது. எனினும் மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட பாதீட்டு இடைவெளியை, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்சாதவாறு மதிபிடவும், மீளாய்வாண்டு இறுதியிலான உள்ளவாறான பாதீட்டு இடைவெளி, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் ஐந்து சதவீதத்தை விஞ்சாதவாறு பேணிச் செல்ல நிதியமைச்சுக்கு இயலாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டில் அந்த சதவீதங்கள் முறையே மதிப்பிடப்பட்ட பாதீட்டு இடைவெளிக்குரியதாக 9.78 சதவீதம் மற்றும் உள்ளவாறான பாதீட்டு இடைவெளிக்குரியதாக 10.71 சதவீதமாக காணப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு. | பதில் வழங்கப்படவில்லை. | 2003 இன் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும். |

| மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி | பாதீட்டு இடைவெளி | | மதிப்பிடப்பட்ட பாதீட்டு இடைவெளி, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக | உள் பாதீ இடை மதிப் மொத் தேசி உற்ப சதவீ |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட | மதிப்பிடப் பட்ட | | |
| ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | ரூபா பில்லியன் | நூற்றுக்கு | நூற்று |
| ---------- | -------- | -------- | ---------------- | --------- |
| 23,843 | 2,333 | 2,554 | 9.78 | 10.71 |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2015 ஜுன் 24 243/2015 ஆம் இலக்கமுடைய அரச கணக்குகள் சுற்றறிக்கை | 2015 ஜுன் 24 திகதிய் 243/2015 ஆம் இலக்கமுடைய அரச கண்கருகள் சுற்றறிக்கை பிரகாரம், 6003 தொகுதியின் வைப்புக் | கொழும்பு மாவட்ட செயலகத்தின் 6003/0/0/01/00/00 இலக்க பொதுவைப்பு கணக்கில் காணப்படும் ரூபா 10 | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்கு வெறிதாக்க எதிர்பார்த்திருந்ததுடன் 2016 ஆண்டு முதல் அந் நடவடிக்கை வருடாந்த மதிப்பீட்டினூடாக மேற்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், இலக்கம் 6003 இன் கீழான வைப்புக் கணக்கொன்றில் ரூபா 10 மில்லியனான மீதியொன்று 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் தீர்க்கப்படாது முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | மில்லியன் வரவு மீதி தொடர்பில் நீல விசாரணை மேற்கொண்டு அவதானிக்கப்பட்டது கொழும்பு மாவட்ட செயலகத்தினால் 2007 ஆம் ஆண்டில் கணக்கு வைக்கப்பட்ட மாற்றல் பத்திரத்தில் தவறான கணக்கு பதிவுகள் காரணமாக இந்த வரவு மீதி உருவாகியுள்ளது என்பது ஆகும். | |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நி.பி 373 இன் பிரகாரம், 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளபடியாக அமைச்சு மற்றும் திணைக்களங்களின் 93 கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 3,893 மில்லியனான வரவு மீதி தீர்க்கப்படாத காணப்பட்டது. அதில் ரூபா 121 மில்லியன் மீதியானது பல ஆண்டுகளாக நிலவி வருவதுடன், அம் மீதிகளை தீர்த்துக் கொள்ள 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றேன். | நி.பி 373 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நி.பி 387 பிரகாரம் எந்தவொரு அரச வங்கிக் கணக்கொன்ரிலிருந்தும் மேலதிக பற்று பெற்றுக் கொள்வது தடையான போதும், ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் மக்கள் வங்கி கணக்கினூடாக 2022 மே 09 திகதி வங்கி மேலதிக பற்று வசதியை பெற்றிருந்ததுடன், அத் திகதியில் அக்கணக்கின் மேலதிக பற்று மீதியான ரூபா 7,727,113,034 ஆன பெறுமதிக்காக ரூபா 30,925,253 ஆன மேலதிக பற்று வட்டியினை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | நாட்டில் பாரிய பொருளாதார வீழ்ச்சி ஆரம்பித்ததுடன் 2022 ஆம் ஆண்டின் மே மாதம் ஓய்வூதியம் செலுத்துவதற்காக திறைசேரியின் பிரதி செயலாளர் வங்கி கணக்குகளில் திரவத்தன்மை போதுமானதாக இல்லாத இருந்த காரணத்தால் ஓய்வூதிய திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ வங்கி கணக்கிற்கு ஓய்வூதியத்திற்கு வழங்கப்பட்ட | நி.பி 387 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | நிதியத்தின் அளவானது அனுப்பப்பட்டிருக்கவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் ஓய்வூதியம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமையால் சில தினங்கள் மாத்திரம் செல்லுபடியாகும் வகையில் குறித்த உத்தியோகப்பூர்வ வங்கி கணக்கில் மேலதிக பற்று ஒன்றினை பேணிச்செல்ல நேர்ந்திருந்தது. |

## 2. முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரசின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதிக்கு விநியோகித்துள்ள திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைமுறிகளின் பெறுமதி முறையே ரூபா 4,126,383,805,527 மற்றும் ரூபா 8,692,134,561,000 ஆனது. இப் பெறுமதியினுள் இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்துள்ள திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி பிணைமுறிகளின் பெறுமதி முறையே ரூபா 2,575,716,725,527 மற்றும் ரூபா 22,461,378,516 ஆனது. அதன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதிக்கு விநியோகித்துள்ள திறைசேரி உண்டியல்களில் 62.42 சதவீதம் மற்றும் திறைசேரி பிணைமுறிகளில் 0.26 சதவீதம் இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | ஒட்டுமொத்த பொருளாதார வீழ்ச்சியின் அடிப்படையில் இலங்கையின் கடன் தரப்படுத்தல் பிரகாரம் வீழ்ச்சியடைந்தமை காரணமாக வெளிநாட்டு கடனை பெற்றுக் கொள்வதில் நிலவிய வரையறைகள் காரணமாக வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை தீர்ப்பதற்கு உள்நாட்டு சந்தைக்கு பிரவேசிக்க வேண்டிதாக இருந்தது. அவ்வாறே ஆண்டினுள் உருவாகிய மொத்த திறைசேரி உண்டியல்கள், சந்தையில் மேல் வெளியிடுவதற்கு (Rollover) எதிர்பார்த்த போதிலும் ஒவ்வொரு அதிகரிப்புகளிலும் | இலங்கை மத்திய வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள திறைசேரி முறிகள் மற்றும் உண்டியலின் பெறுமதிகளை குறைந்த மட்டத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | அவ்வாறு அதிகரித்த ஒட்டுமொத்த அளவானது குறித்த ஏலத்தில் சந்தையில் பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் அரச கடனை செலுத்தாதிருப்பதை தவிர்ப்பதற்கு சந்தையில் பெற்றுக் கொள்வதற்கு தவறிய அளவினை அதாவது பற்றாக்குறையை இலங்கை மத்திய வங்கிக்கு வெளியிடுவதற்கு நேர்ந்துள்ளது. அதனால் 2022.12.31 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள திறைசேரி உண்டியல்களில் 62.42 சதவீதம் இலங்கை மத்திய வங்கியால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எனினும், நிலவும் சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு அமைய முதன்மை சந்தையினுள் இலங்கை மத்திய வங்கிக்கு திறைசேரி பிணைமுறிகளை வெளியிட முடியாது உள்ளது. அதற்கு அமைய, பிணை முறிகளின் அளவானது இலங்கை மத்திய வாங்கினால் அவர்களது செயற்பாட்டு பணிப்பொறுப்பினுள் இரண்டாம் நிலை சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட பிணை முறகிள் ஆகும். | |
| (ஆ) | இலகு புகையிரத இடம்பெயர் தொகுதி கருத்திட்டத்தை பூர்த்தி செய்ய ஒப்பந்ததாரர் கோரியிருந்த உரிமை தொடர்பாக கலந்துரையாட அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் குழுவினால் முன்வைக்கப்பட்ட | இணங்குகின்றேன். | செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்படும் வெளிநாட்டு கடனை உச்சமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | பரிந்துரைகளின் பிரகாரம் OCG-JV கம்பனியினால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஐ.அ.டொ. 2,930,307.48 இற்கு சமமான தொகையை, வெட் வரி மீள்நிரப்புதல் தாமதித்தன் காரணமாக தாமதித்த தொகைக்குரிய வட்டித் தொகையாக ரூபா 3,733,128 மற்றும் கருத்திட்டத்தை இடைநிறுத்திய காரணத்தால் OCG-JV கம்பனி ஆனணியின் சேவையை முடிவுறுத்த ஏற்பட்ட பொது செயற்பாட்டு செலவிற்காக செலவிட்ட தொகையாக கோரியிருந்த பணமாக ஐ.அ.டொ 492,749 யை OCG-JV கம்பனிக்கு செலுத்த 2022 நவம்பர் 22 திகதி அமைச்சரவையினால் தீர்மானிபக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2018 இன் 254 ஆம் வரவுசெலவு திட்ட முன்மொழிவு பிரகாரம், 10 ஆண்டுகளினுள் தற்போது பயன்படுத்தும் மேம்படுத்திய பண அடிப்படை முறைமையிலிருந்து அட்டுறு அடிப்படை கணக்கு முறைமையின் கீழ் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பரிமாற்ற தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ் அமைச்சரவை அங்கீகாரத்திற்குரியதாக முன்வைத்த வழகாட்டித் திட்டத்தில் (Road map) உள்ளடங்கிய செயற்பாடுகளிற்குரிய கால சட்டகத்தை அரச கணக்குகள் திணைக்களத்தினால் திருத்தப்பட்டிருந்த போதும், அதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் அமைச்சரவை குறிப்பு பிரகாரம் ஒவ்வொறு ஆண்டு முடிவடைந்து ஒரு மாதத்தின் பின் குறித்த செயற்பாடுகளின் முன்னேற்றத்தை அமைச்சரவைக்கு அறிக்கையிட வேண்டிய போதும், 2023 மே 19 திகதி வரையும் அவ்வாறு முன்னேற்றத்தை | மொழிபெயர்ப்பு நடைமுறை தொடர்பில் செயன் முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு மற்றும் திருத்தப்பட்ட வீதி திட்டத்திற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு வரைபாக்கப்பட்ட அமைச்சரவை பிரமாணம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. | திட்டமிடப்பட்டவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையிட்டிருக்கவில்லை.<br>பரிமாற்ற செயற்பாடுகள் தொடர்பாக சரயான கொள்கை ரீதியா தீர்மானத்திற்கு வந்ததன் பின்னர் உரியவாறு திருத்தப்பட்ட வழகாட்டித் திட்டத்திற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளவுள்ளதாக அரச கணக்குகள் திணைக்களத்தால் கணக்காய்விற்கு அறித்துள்ளது. | | |
| (ஈ) | அரச திணைக்களங்களுடன் செயற்படும் கணக்குகளின் கீழ் வங்கிகளினால் மறுக்கப்பட்ட காசோலைகளாக நீண்ட காலமாக நிலவிவரும் ரூபா 3,995,094 ஆன வரவு மீதியை மீளாய்வாண்டினுள்ளும் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மீதி சுங்கத் திணைக்களத்திற்கு சொந்தமான பிரதான பேரேட்டு கணக்கு மீதி ஒன்றாவது உடன் அதனை தீர்ப்பதற்கு உரிய அறிவுரைகள் மற்றும் கணக்கீட்டு தகவல்கள் அந்த திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது<br>தற்போது உரிய மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் 2023 ஏப்ரல் மாதம் அந்த மீதிகளின் ரூபா 15,941 தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது. | நீண்ட காலமாக முன் கொண்டு வரப்படும் மதிப்பிழந்த காசோலைகளில் பெறுமதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணத்தின் கீழ், மாகாணசபைகளுக்கு இடமாறிச் சென்ற அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கிய முற்பணமாக ரூபா 191,466,910 தொகை நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் நிலவிய போதும் அப் பெறுமதியை மீளாய்வாண்டினுள்ளும் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய அறிவுரைகள் குறித்த மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் பின் தொடர் நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளது. | நீண்ட காலமாக தீர்ப்பனவு செய்யப்படாது காணப்படும் கணக்கு மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | அரச அங்கீகாரம் பெற்ற 8 திறைசேரி முற்பணக் கணக்குகளின் கூட்டுத் தொகை ரூபா 70,959,434 ஆன வரவு மீதி மற்றும் 3 முற்பணக் கணக்குகளின் கூட்டுத் தொகை மறை ரூபா 18,066,465 | ஒவ்வொரு கணக்குகள் தொடர்பிலும் தனித்தனியாக விசாரித்து அந்த தலைப்பு விடயங்களுக்கு உரிய கணக்குகளை செயல்படுத்திய | நீண்ட காலமாக தீர்ப்பு செய்யாது காணப்படும் முற்பண கணக்கு மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | ஆன மீதி தீர்க்கப்படாது பல ஆண்டுகளாக தொடர்ந்தும் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | நிறுவனங்களை சரியாக இணங்கண்டு, நி.பி. 518 இன் பிரகாரம் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு உரிய நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று 06 தலைப்புகளிற்குரிய 06 முற்பணக் கணக்குகளிற்குரிய ரூபா 455,036,103 தொகையான மறை மீதி நிலவியது. | இந்த கணக்குகளை செயற்படுத்தல் அந்தந்த திணைக்களங்களில் தலைவர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 6 கணக்குகளில் 03 செயலிழந்த கணக்குகள் என்பதுடன், அவற்றின் கணக்குகளை மூடுவதற்கு தற்போது உரிய நிறுவனங்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | முற்பண கணக்குகளில் மறை பெறுமதி நிலவுதல் தொடர்பில் காரணங்களை ஆராய்ந்து தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | தலைப்பு 111 – சுகாதார அமைச்சின் கீழ் ரூபா 1,221,599,026 ஆன களஞ்சிய மற்றும் ஏனை முற்பண கணக்கின் ஆரம்ப மீதியொன்று நிலவிய போதும், அதற்குரிய காலப் பகுப்பாய்வு அல்லது அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | இந்த மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கக்கூடிய தகவல்கள் சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ளதுடன், அத்தகவல்களை ஆராய்ந்து இந்த செயலிழந்துள்ள மீதியை தீர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சுக்கு 2023.01.11 ஆந் திகதி அறிவுரை வழங்கப்பட்டது. | முற்பண கணக்குகளில் மறை பெறுமதி நிலவுதல் தொடர்பில் காரணங்களை ஆராய்ந்து தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | 2008 மே 22 திகதி நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட இலக்கம் 1550/7 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் 7 பந்தி பிரகாரம் இலங்கையிலிருந்து ஆரம்பமாகும் விமான பயணத்திற்காக இலங்கைக்கு | அரசின் வரி அல்லாத வருமானமாக முயற்சிகளிடமிருந்து வருமான வரி மற்றும் பங்கு இலாபம் சேர்க்கும் பணி பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு | திணைக்களத்தின் பிரதான பணியான வருமானம் சேகரித்தல் தொடர்பில் முறையான திட்டம் தயாரித்து நடைமுறைப்படுத்த |

வெளியில் விநியோகிக்கும் அல்லது விற்வனை செய்யும் ஒவ்வொறு பயணச் சீட்டு தொடர்பாகவும் அவ்வாறான பயணச் சீட்டு விற்பனை செய்த முறை மற்றும் அல்லது விநியோகிப்பதை கவனிக்காது அ.டொ 60 மிகை அறவீடு அல்லது அத்தொகைக்கு சமமான தொகை அறவிட வேண்டுமெனவும், அவ் வர்த்தமானியில் 8 பந்தி பிரகாரம் அவ்வாறு திரட்டும் மிகை அறவீட்டுத் தொகை சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கின்ற வாறு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2008 ஆகஸ்ட் 01 திகதி முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரை சிவில் விமான சேவை அதிகாரசபையினால் மிகை அறவீடாக ரூபா 16,982 மில்லியன் திரட்டியிருந்த போதும் அத்தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக 2017 ஜுன் 12 திகதி சட்ட செயற்பாடுகள் திணைக்களத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அபிப்பிராயமான ‘‘இம் மிகை அறவீட்டை தொடர்ந்தும் அறவிட இயலுமை காணப்படுவதாகவும், அம் மிகை அறவீட்டுத் தொகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கும் சட்ட கடப்பாடு காணப்படுவதாகவும்’’ குறிப்பிட்டு 2017 ஏப்ரல் 07 திகதிய சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட கடிதத்துடன் பொது முயற்ச்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அறிவூட்டப்பட்டிருந்தார். அவ்வாறாயினும், கணக்காய்வு திகதியளவிலும் இம் மிகை அறவீட்டுத் தொகையை சிவில விமான சேவைகள் அதிகாரசபையிடமிருந்து அறவிட சாட்டப்பட்டுள்ளதுடன், வரி வருமானம் சேகரித்தல் தொடர்பில் அரச நிதி கொள்கைகள் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும் மேற்படி மிகை அறவீடு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

அத்துடன் அந்த மிகை அறவீட்டினை அறவிட்டு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்குமாறு திறைசேரி செயலாளரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் கடற்படை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு 2023.04.26 திகதி அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வேண்டியமை.

| | | | |
|---|---|---|---|
| | பொது முயற்சிகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஔ) | 2022 திசெம்பர் 31 திகதி சமர்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கிற்கான காலப் பகுப்பாய்வு அட்டவணை பிரகாரம், இடமாறிச் சென்ற உத்தியோகத்தர், கூட்டுத்தாபனம், சபைகள் மற்றும் மாகாணசபைக்கு நிறந்தரமாக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர், மரணித்த உத்தியோகத்தர், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கடமை தடைவிதித்த உத்தியோகத்தர், கடமையை விட்டுச் சென்ற/ முடிவுறுத்திய உத்தியோகத்தர் மற்றும் ஏனைய வகையின் கீழான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 01 ஆண்டுகள் மற்றும் 04 ஆண்டுகளிற்கிடையிலான கடன் மீதி ரூபா 319 மில்லியனானதுடன் 05 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 391 மில்லியனாக இருந்தது. | கணக்கிட்டு உத்தியோகத்தர் மற்றும் பிரதம கணக்கிட்டு உத்தியோகத்தால் அரச உத்தியோகத்தர்களின் முற்பண ‘‘பீ’’ கணக்கின் கொடுப்பனவுகள் மற்றும் அறவீடுகள் தொடர்பில் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதுடன், அரச கணக்குகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் முற்பண ‘‘பீ’’ கணக்கின் கணக்கீட்டு பணிகள் சேயற்திறனாக மேற்கொள்வதற்கு மற்றும் உரிய கொடுப்பனவு அலகுகளின் மூலம் கணக்கு வைக்கப்படும் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுதல் ஆகும். முற்பண ‘‘பீ’’ கணக்கினை இணக்கம் செய்யும்போது ஏற்படும் சிக்கல்கள் தொடர்பில் நிறுவனங்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்குதல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. | நீண்டகால அறவிடப்படாது காணப்படும் அரச உத்தியோகத்தர்கள் முற்பண மீதிகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஓ) | அரசின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம், 2022 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 491,552 மல்லியனான உப கடன் மீதி கிடைக்க வேண்டியதாக காணப்பட்டது. குறித்த நிறுவனங்கள் தொடர்பான உப கடன் உடபடிக்கை பிரகாரம் செலுத்தாத காரணத்தால் 5 உப கடன் உடன்படிக்கைகளிற்குரியதாக 4 நிறுவனங்களினால் 2022 திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டிய உப கடன் தவணைகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 260,503 மில்லியனானது. | உப கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் செலுத்தாத காரணத்தால் 05 கடன் உடன்படிக்கைகளுக்கு உரிய 04 நிறுவனங்களால் 2022.12.31 ஆந் திகதி அறவிடப்பட வேண்டிய உப கடன் தவணைகளில் பெருமதி ரூபா 260,503 மில்லியன் ஆகும். | அரசின் உப கடன் வழங்குதல், அதனை மீள அறவிடுதல் மற்றும் உபகடன் சேவைகளை கணக்கு வைத்தல் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றில் ரூபா 778 மில்லின் கூட்டு தவைணப் பெறுமதி 5 ஆண்டுகளை விஞ்சிய காலமாக நிலவிவரும் மீதியாகும். | | |
| (ஔ) | 2022 திசெம்பர் 31 திகதிக்கு உப கடனிற்காக கிடைக்க வேண்டிய வட்டிப் பெறுமதி ரூபா 912 மில்லியனானதுடன், 3 நிறுவனங்கள் குறித்த உடன்படிக்கை பிரகாரம் பொது திறைசேரிக்கு 2022 ஆண்டிற்குரியதாக எவ்வித வட்டித் தொகையையும் செலுத்தி இருக்காததுடன் அவற்றில் 5 ஆண்டுகளை விஞ்சிய செலுத்தாத வட்டி பெறுமதியின் கூட்டுத் தொகை ரூபா 616 மில்லியனானது. | 2022.12.31 திகதி உபகடன்களுக்கு தொடர்ந்தும் பெற வேண்டிய வட்டி பெறுமதி ரூபா 912 மில்லியன் ஆகும். | அரச உபகடன் வட்டி அறவீடு முறைமை படுத்தப்பட வேண்டும். |
| (க) | 2022 ஆண்டினுள் ரூபா 318,061 மில்லியனான கூட்டு உப கடன் மீதியை வழங்கியிருந்ததுடன் அவற்றில் ரூபா 285,191 மில்லியனான உப கடன் மீதி 06 நிறுவனங்களிற்காக மீளாய்வாண்டினுள் புதிய உப கடன் மீதியாக வழங்கப்பட்டிருந்தது. இவ் உப கடன் பெறுமதி மீளாய்வாண்டினுள் வழங்கிய மொத்த பெறுமதியின் 90 சதவீதமாக இருந்தது. | 2022 ஆம் ஆண்டில் புதிய உபகடன் மீதிகளாக 06 நிறுவனங்களுக்கு உரிய ரூபா 285,191 மில்லியன் ஆகும். | அரசின் உப கடன் வழங்குதல், அதனை மீள அறவிடுதல் மற்றும் உபகடன் சேவைகளை கணக்கு வைத்தல் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கா) | அரசின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மீளாய்வாண்டினுள் அரசிற்கு சொந்தமான முயற்ச்சிகளின் மூலதன பங்களிப்பு அதிகரிப்பு ரூபா 1,405,204 மில்லியனானதுடன் அவற்றில் ரூபா 1,246,401 மில்லியன் அதாவது 89 சதவீதம் 2023 பெப்ரவரி 07 திகதி அ.ம.ப. 23/0154/604/014 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் அரசிற்கு சொந்தமான முயற்ச்சிகளின் இனங்கண்ட பொறுப்புக்களை இலங்கை அரச ஐந்தொகைக்கு ஒப்படைப்பதன் கீழ் செம்மையாக்கிய பெறுமானங்களின் காரணத்தினால் என அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறு. | கணக்காய்வு ஐயவனாவுடன் இணங்குகின்றேன். அரசுக்கு சொந்தமான முயற்சிகளின் இனம் காணப்பட்ட பொறுப்புக்கள் இலங்கை அரசின் ஐந்தொகைக்கு சாட்டப்பட்ட எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட MF/PE/001/CM/2023/005 இலக்க மற்றும் 2023.01.20 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் பிரகாரம் இலங்கை மின்சார சபைக்கு மற்றும் இலங்கை பெற்ரோலிய கூட்டுத்தாபனத்திற்கு உரிய பொறுப்புக்கள் அரசின் ஐந்தொகைக்கு சாட்டுதல் இடம்பெற்றது. | அரசிற்கு சொந்தமான முயற்சிகளை இனம் கண்டு பொறுப்புக்கள் அரசாங்கத்திற்கு சாட்டப்பட்டமையால் அரச நிதி பின்னடைவுக்கு தாக்கம் அளிக்க கூடும் என்பதால் அந்த பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்ய உரிய நடைமுறை நிறுவப்பட வேண்டும். |

| | **நிறுவனம்** | **அரசிற்கு சொந்மான முயற்சிகளின் இனங்கண்ட பொறுப்புக்களின் கீழ் அரச ஐந்தொகைக்கு செம்மையாக்கிய பெறுமானம்** |
|---|---|---|
| | | ரூபா |
| 1 | இலங்கை மின்சார சபை | 362,307,620,369 |
| 2 | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 884,093,386,477 |
| | | -------------------------- |
| **கூட்டுத்தொகை** | | **1,246,401,006,846** |

| | | | |
|---|---|---|---|
| (கி) | மீளாய்வாண்டினுள் 04 மானியம் வழங்குனர்களிடமிருந்து 05 கருத்திட்டங்களிற்குரியதாக கிடைத்திருந்த போதும் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாது கூட்டுத் தொகை ரூபா 34,740,561 ஆன வெளிநாட்டு மானியம் மீண்டும் மானிய வழங்குனருக்கு | உரிய செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட பணம் குறித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்தும் ஏதேனும் பணம் எஞ்சினால் மற்றும் அந்த பணம் வழங்கப்பட்டவரால் | கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு நன்கொடைகளை உச்சமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| அனுப்பப்பட்டிருந்தது. | கோரப்பட்டால் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தின் கோரிக்கையின் அடிப்படையில் வழங்கிய நிறுவனத்திற்கு மீள அனுப்புதல் கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 வருமானங்களை மதிப்பீடு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 24,148 பில்லியன் ஆக இருந்ததுடன், 2021 ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 16,809 பில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த தேசிய உற்பத்தி ரூபா 7,339 பில்லியனால் அதாவது 43.66 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2022 ஆண்டிற்காக பாாராளுமன்றத்தினால் அங்கீகரித்த வருடாந்த பாதீட்டு ஆரம்ப மதிப்பீட்டின் பிரகாரம் அரச வருமானம் ரூபா 2,213 பில்லியனாக இருந்ததுடன், 2022 ஆண்டில் முன்வைத்த உப பாதீட்டின் மூலம் அரச வருமானம் ரூபா 2,084 பில்லியனாக இருந்ததுடன், கடந்த ஆண்டில் அது ரூபா 1,961 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டைவிட அரச வருமானம் ஆரம்ப பாதீட்டு மதிப்பீடு மற்றும் உப பாதீட்டிற்கு அமைய முறையே ரூபா 252 பில்லியனினால் மற்றும் ரூபா 123 பில்லியனினால் அதாவது 12.85 சதவீதத்தால் மற்றும் 6.27 சதவீதத்தினால் அதிகரித்து அரச பாதீட்டு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் முதல் காலப்பகுதியில் ஒட்டுமொத்த உலகத்திற்கும் தாக்கம் அளித்த கோவிட் - 19 தொற்றுநோய் நிலைமையை 2022 ஆம் ஆண்டு வரையிலும் நீடித்தமை, 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவுடன் அரசு நிதி, பணம், வெளிநாட்டு தொடர்புகளில் ஏற்பட்ட பாதகமான நிலைமை, நிலவிய பொருளாதார பின்னடைவின் மத்தியில் அந்நிய செலாவணி வெளிப்பாய்ச்சலை கட்டுப்படுத்த விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக இறக்குமதி வரிகளில் இருந்து கிடைத்த வருமானம் குறைவடைந்தமை, பொருளாதார பின்னடைவு காரணமாக பொருளாதாரப் பணிகளில் மந்த நிலை ஏற்பட்டமை போன்ற விடயங்களினால் வருமான | வருமானங்களை சரியாக மதிப்பீடு செய்து உரிய மதிப்பீடுகளை தயாரிக்க வேண்டியவை மற்றும் அவற்றின் திருத்தங்களை மேற்கொள்ளும் போது வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை நிதியிடம் செய்யும் முறை தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியமை. |

அந்த வருமான மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பாதீட்டு நிலுவையை மதிப்பிட்டிருந்த போதும் ஆரம்ப வருமான மதிப்பீடு வருமான மதிப்பீட்டு உத்தியோகத்தரினால் ரூபா 2,102 பில்லியனாக காட்டி ரூபா 111 பிலிலியனினால் குறைத்து திருத்தப்பட்டிருந்தது. அத் திருத்திய வருமான மதிப்பீட்டின் பிரகாரம் அரச வருமானம் மொத்த தேசிய உற்பத்தியின் 8.7 சதவீதமாக இருந்தது. வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது மொத்த தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு மீது கவனம் செலுத்த வேண்டியிருந்த போதும், அதன் பால் கவனம் செலுத்தாது வருமான மிகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

2022 ஆண்டில் திரட்டிய அரச வருமானம் ரூபா 1,999 பில்லியனான இருந்ததுடன், அது திருத்திய வருமான மதிப்பீட்டை விட ரூபா 103 பில்லியனினால் குறைந்திருந்தது. அதன் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்பித்த வருடாந்த பாதீட்டு ஆரம்ப மதிப்பீடு மற்றும் 2022 ஆண்டு சமர்பித்த உப பாதீட்டு மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் அக் குறைவு முறையே ரூபா 214 பில்லியன் மற்றும் ரூபா 85 பில்லியனாக இருந்தது. 2012 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை கால வீச்சளவினுள் ஒவ்வொறு ஆண்டினுள்ளும் பாராளுமன்றத்திற்கு சமர்பித்த வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்படும் வருமானத்திலும் திரட்டிய வருமானத்தின் குறைவு 4.08 சதவீதம் முதல் 26.06 சதவீத வீச்சளவை கொண்டிருந்ததுடன், அக்கால வீச்சளவினுய் அதிகரிப்பு சதவீதம் 2021 ஆண்டில் அவதானிக்கப்பட்டது.

நிதிப் பிரமாணம் 85(2)(ஆ) பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் வருமான மதிப்பீட்டை மதிப்பிட அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடல் மாத்திரம் மதிப்பீட்டினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. விசேடமாக, அரசு வருமானம், அரசு வருமான வரி மற்றும் வரி அல்லாத மூலங்களிலிருந்து உருவாகும் வருமானங்களை கொண்ட அமைந்திருந்ததுடன், வரி அடிப்படை, வரி வீதங்கள், வரி நெகிழ்வுத் தன்மை (Tax Elasticity) மற்றும் வரி மிதப்பு (Tax Buoyancy) அரச கொள்கைகள் அரசு வருமானத்திற்கு தாக்கம் அளிக்கும் பிரதான விடயங்கள் ஆகும். விசேடமாக அரச வருமானத்தில் தளம்பல் குறித்து ஒட்டுமொத்த பொருளாதார காரணிகள் மற்றும் அவற்றின் போக்குகள் பிரதானமாக தாக்கம் அளிக்கும். அதற்கு மேல் அதிகமாக மக்களின் செயற்பாட்டுத்திறன், கேள்வி மற்றும் வழங்கல் மூலம் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள், உள்நாட்டினை போன்றே வெளிநாட்டு நடத்தைகள், அரசின் குறுங்கால மற்றும் நீண்ட கால அபிவிருத்தி திட்டங்கள், அரசு நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் இயல் அளவு அபிவிருத்தி ஆகியவற்றின் தாக்கங்கள் இவ்வாறு எதிர்பாராத ஏற்படும் இடர் நிலைமைக்கு தாக்கம் அளித்து அரசு வருமானத்தின் தளம்பலுக்கு நேரடியாக தாக்கம் அளிக்கும் விடயங்கள் முக்கிய இடத்தை எடுக்கிறது.

குறிப்பிடப்படுவதால், பாராளுமன்றத்தினால் அங்கீகரித்த வருமான மதிப்பீடொன்றை பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி திருத்த சந்தர்ப்பம் வழங்கியதால் வருமானம் ஆக்கபூர்வமான மதிப்பீடு செய்யும் கடப்பாடு குறைந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது.

அதனால் அரச வருமானம் உள்ளடங்களாக நாட்டின் ஒட்டுமொத்த அரச நிதி கொள்கை மற்றும் ஒட்டுமொத்த எதிர்வுகூறல் மேற்கொள்ளும் போது ஒட்டுமொத்த பொருளாதார தளம்பலை போன்று அதனுடன் தொடர்புடைய ஏனைய விடயங்களும் தாக்கமளிக்கும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

அவ்வாறே, அரச நிதி கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 1/2015 இன் பிரகாரம் எதிர்வரும் வருடத்திற்கான வருமான மதிப்பீட்டினை தயாரிப்பதுடன் அதனோடு இணைந்ததாக நிலவும் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டினையும் தயாரித்தல் இடம்பெறுவதுடன் அவ்வாறு திருத்தப்பட்ட வருமான மதிப்பீடும் எதிர்வரும் வருடத்திற்கான பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படும் ஒதுக்கீட்டு அதிகாரச் சட்ட வரைபினுள் உள்ளடக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படும். விசேடமாக திருத்தப்பட்ட வருமான மதிப்பீடுகளை தயாரிக்கும் போது வருமான கணக்கீட்டு உத்யோகத்தரால் குறித்த வருமான தலைப்பின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படும் நிலவும் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டினைப் போன்று கடந்த வருடங்களில் வருமானங்களின் போக்கு

அந்தந்த வருமான தலைப்பின் பிரகாரம் கருத்தில் கொள்ளப்படும் ஆண்டின் முதல் மாதங்களில் வருமான செயலாற்றல், பொருளாதார அபிவிருத்தி உள்ளடங்களாக ஒட்டுமொத்த பொருளாதார தளம்பல்களில் எடுகோள்கள் மற்றும் அவற்றின் குறுங்கால திட்டங்களைப் போன்று உள்நாட்டு மற்றும் கட்டுப்பாட்டை மீறிய வெளிநாட்டு சந்தை நடத்தைகளை போன்றே இதற்கு தாக்கம் அளிக்கும் ஏனைய நிலைமைகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தி திருத்தப்பட்ட மதிப்பீடு தயாரிக்கப்படும்.

## 3.2 வருமான பற்றாக்குறை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் வருமான பற்றாக்குறை ரூபா 1,540 பில்லியனாக இருந்ததுடன், கடந்த ஆண்டில் அது ரூபா 1,290 பில்லியனாக இருந்தது. 2006 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான கால வீச்சளவில் உச்ச வருமான பற்றாக்குறை 2022 ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்தது. அக் கால வீச்சளவில் ஒவ்வொறு ஆண்டும் திரட்டிய வருமானம் அரச மீண்டுவரும் செலவினத்தை தீர்த்துக் கொள்ள இயலாதிருந்தது. வருமான பற்றாக்குறையின் குறைந்த பெறுமதி 2007 ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது ரூபா 43 பில்லியனாக இருந்ததுடன் திரட்டிய அரச வருமானத்தில் 7.52 சதவீத பிரதிநிதிப்படுத்தலானது. அக்காலப் பகுதியினுள் மொத்த வருமான குறைபாடு ரூபா 6,319 பில்லியனாக இருந்தது. அக் குறைபாட்டை தீர்த்துக் கொள்ள தேசிய | குறித்து வைத்துக் கொள்கின்றேன். அவ்வாறான போதிலும் பொருளாதார பகுப்பாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் வருமானம் , செலவினம் மற்றும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை உருவாக்கப்படுவது பொருளாதார வகைப்படுத்தலுக்கு இணங்க ஆகும். விசேடமாக வருமான தலைப்பிற்குரிய அந்தந்த ஆண்டுகளில் பெற வேண்டிய வருமானங்களை அறவிடாமை/ செலவு வைக்காமை/ கொடுப்பனவுகளை புறக்கணித்தல் போன்றவற்றின் காரணமாக | வருமானப் பற்றாக்குறையை குறைத்துக் கொள்வதற்கு வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை மற்றும் சிக்கனமாக செலவு மேற்கொள்ள வேண்டியமை. |

மற்றும் வெளிநாட்டுக் கடன் மற்றும் வெளிநாட்டு மானியம் பெறப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் அக் கால வீச்சளவினுள் தேசிய கடன் ரூபா 20,484 பில்லினும் வெளிநாட்டு கடன் ரூபா 7,487 பில்லியனும் வெளிநாட்டு மானியம் ரூபா 246 பில்லியனாக கூடடுத் தொகை ரூபா 28,218 பில்லியன் பெறப்பட்டிருந்தது. ஒவ்வொறு ஆண்டுகளிலும் அவ்வாறு பெறப்பட்ட கடன் மற்றும் மானியங்களினால் 6.89 சதவீதம் முதல் 45.59 சதவீதமான வீச்சளவினூடாக வருமான பற்றாக்குறை நிதியிடப்பட்டிருந்தது. பெறப்பட்டிருந்த கடன் மற்றும் மானியங்களால் முதலீடு செய்யாது மீண்டுவரும் செலவுகளை தீர்க்க 2019 ஆண்டில் 20.25 சதவீதமும், 2020 ஆண்டில் 45.59 சதவீதமும், 2021 ஆண்டில் 42.39 சதவீதமும் மற்றும் 2022 ஆண்டில் 30.59 சதவீதமுமாக பயன்படுத்தப்பட்டிருந்தன.

மீளாய்வாண்டினுள் ரூபா 1,565 பில்லியனான வட்டி செலுத்தியிருந்ததுடன் அது மொத்த மீண்டுவரும் செலவின் 44.22 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியது. கடந்த ஆண்டில் வட்டி செலுத்தல் ரூபா 1,048 பில்லியன் அதாவது மொத்த மீண்டுவரும் செலவின் 38.01 சதவீதமாக காணப்பட்டது. வட்டி செலுத்தல் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 517 பில்லியனால் அதிகரித்திருந்தது. மேலும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட இடைகால வெளிநாட்டு கடன் செலுத்தல் இடைநிறுத்துவதன் கொள்கைரீதியான தீர்மானம் பிரகாரம் 2022 ஏப்ரல் 13 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டு இறுதி அளவில் சில கடன்தவணைகள் மற்றும் வட்டி கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டிருந்த போதும் அதற்குரிய கொடுப்பனவை மேற்கொண்டால் அப் பற்றாக்குறை மேலும் அதிகரிப்பதாக அவதானிக்கப்பட்டது. 2006 ஆண்டில் 151 பில்லியனான வட்டி செலுத்துதல் 2022 ஆண்டளவில் அது ரூபா 1,565 பில்லியன் வரை 936 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. பாதீட்டு நிலுவையை நிதியீட்டம் செய்ய கடன் பெற்றுக் கொள்ள வேண்டியேற்பட்டிருந்ததுடன் அதற்கான வட்டி செலுத்தல் வருடாந்தம் நிலுவை வருமானம் அறிக்கை இடப்படல் அரசு வருமான செயலாற்றல் தொடர்பில் தாக்கம் ஏற்படுத்தும் என்பது உண்மையாகும்.
எவ்வாறான போதிலும், இது தொடர்பில் உரிய வருமான தலைப்புகளுக்கு பொறுப்புகளுக்கு நேரடியாக கடப்பட்டுள்ள வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரை போன்று அனைத்து அமைச்சு/ திணைக்களங்கள் ஆகியவற்றின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த நிலுவை வருமானத்தை தொடர்ச்சியாக சேகரித்தல் தொடர்பில் நேரடியான பொறுப்பிற்கு கடப்பட்டுள்ளார்.

அதிகரித்திருந்தது. 2022 ஆண்டில் திரட்டிய ரூபா 1,999 பில்லியனான அரசின் வருமானத்தில் ரூபா 1,565 பில்லியன் அதாவது 78.29 சதவீதமான வட்டி செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. இந் நிலைமை குறித்த காலப் பகுதியில் வருடாந்தம் அதிகரித்துள்ளதுடன், 2019 ஆண்டு முதல் அது துரிதமாக அதிகரித்துள்ளது.

வருமானம் திரட்டும் பிரதான நிறுவனமான உள்நாட்டு இறைவரி திணைக்களம். .இலங்கை சுங்கம், மதுவரி திணைக்களம் மற்றும் மோடார் வாகன திணைக்களத்திற்குரிய மீளாய்வாண்டில் அறவிட வேண்டிய நிலுவை வருமான மீதியின் கூட்டுத் தொகை ரூபா 971,330,513,621 ஆனது.

எவ்வாறாயினும், கூடுதலான நிலுவை வருமானமொன்று அறிக்கையிடப்பட்டுள்ள உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் 2022 திசெம்பர் 31 திகதியளவில் திரட்ட வேண்டியிருந்த ரூபா 904 பில்லியனான வருமானம், திரட்டாது நிலுவையாக காணப்பட்டது. அவ் வருமானம் 2022 ஆண்டில் திரட்ட முடியுமாக இருப்பின் அவ்வாண்டு வருமான பற்றாக்குயை ரூபா 636 பில்லியன் அதாவது 41.30 இனால் குறைத்துக் கொள்ள முடியுமாக இருந்தது. அந் நிலுவை வருமானம் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் முறையே ரூபா 698 பில்லியன் மற்றும் ரூபா 620 பில்லியனாக இருந்தது. அவ்வாண்டுகளிலும அந்த நிலுவை வருமானத்தை திரட்ட முடியுமாக இருந்திருந்தால் 2020 ஆண்டில் வருமான பற்றாக்குறை ரூபா 606 பில்லியன் வரை 46.47 சதவீதத்தால் 2021 ஆண்டில் வருமான பற்றாக்குறை ரூபா 670 பில்லியன் வரை 51.94 சதவீதத்தால் குறைத்துக் கொள்ளக்கூய இயலுமை காணப்பட்டது.

அதன் பிரகாரம், வரி நிர்வாக முகாமைத்துவ தகவல் தொகுதியின் நிலவும் குறைபாடுகள், வரி மேன் முறையீட்டு செயல்முறையின் நீண்டகாலத்தன்மை, நிலுவை வரி அறவிடல் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளை அமுல்படுத்த வஷேடமான நீதி மன்ற தொகுதியொன்று

நிறுவப்படாமை போன்ற காரணங்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் நிலுவை வரி அறவிடலின் தாமதத்திற்கு தாக்கம் செலுத்தியிருந்தன.

சரியாக வருமான மதிப்பீட்டை தயாரித்திருக்காதமை அல்லது தயாரித்த வருமானம் மதிப்பீட்டின் பிரகாரம் வருமானம் திரட்டாமையும், சிக்கனமாக செலவினத்தை முகாமைத்துவம் செய்யாமையும் காரணமாக அரச கடன் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. அக் கடன் பெற்றுக் கொள்ளல் வருடாந்தம் அதிகரித்திருந்ததால் கடன் வட்டி கிரயம் வருடாந்தம் அதிகரித்திருந்த காரணத்தால் மீண்டுவரும் செலவினம் அதிகரித்திருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானம் எதிர்பார்த்தவாறு திரட்டிக் கொள்ள முடியாமையும், மீண்டுவரும் செலவு அதிகரித்தமையும் காரணமாக வருடாந்த செலவினத்தை தீர்த்துக் கொள்ள வருமானம் போதாமையால் வருமான பற்றாக்குறை வருடாந்தம் அதிகரித்திருந்தது.

### 3.3 வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2022 ஆண்டில் பாதீட்டு நிலுவை ரூபா 2,555 பில்லியனாக இருந்ததுடன் அது மொத்த தேசிய உற்பத்தியின் 10.58 சதவீதமாக இருந்தது. 2021 ஆண்டின் பாதீட்டு நிலுவை ரூபா 2,080 பில்லியனாக இருந்ததுடன், அது மொத்த தேசிய உற்பத்தியின் 12.37 சதவீதமாக இருந்தது. 2006 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை மொத்த கால வீச்சளவு பூராவும் பாதீட்டு நிலுவையொன்று நிலவியதுடன், அது 2006 ஆண்டில் நிலவிய ரூபா 300 பில்லினான பாதீட்டு நிலுவை 2022 ஆண்டளவில் ரூபா 2,555 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. அக்கால வீச்சளவில் உச்ச பாதீட்டு நிலுவை 2022 ஆண்டில் அறிக்கையிடப்பட்டிருந்தது. 2006 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை பாதீட்டு நிலுவை மொத்த தேசிய உற்பத்தியின் | கடந்த சில ஆண்டுகளில் இலங்கை பொருளாதார தொடர்பில் தாக்கம் அளித்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய சூழலில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களின் தாக்கம் வரவு செலவு திட்ட பற்றாக்குறை அதிகரித்தமைக்கு பிரதானமாக பங்களித்துள்ளது. அவ்வாறே, கொவிட் - 19 தொற்றுநோய் காரணமாக பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட தாக்கங்கள் 2022 ஆம் ஆண்டு வரையிலும் நிலவியமை, 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாரிய பொருளாதார பின்னடைவு, நாட்டினுள் ஏற்பட்ட | உரிய சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை குறைத்துக்கொள்ளப் பட வேண்டியமை. |

சதவீதமாக கொள்கையில் அது 5.55 சதவீதம் முதல் 14.08 சதவீதம் வரையான வீச்சளவில் நிலவியது. உள்ளவாறான பாதீட்டு நிலுவை உள்ளவாறான மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக 2003 இன் இலக்கம் 3 கொண்ட நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 3(அ) பிரிவு பிரகாரம் நிலவ வேண்டியிருந்த 5 சதவீத எல்லை அக்காலப் பகுதியினுள் எந்தவொறு ஆண்டினும் பேணிக் கொண்டிருக்கவில்லை. 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் முறையே 5.55 சதவீதம் 5.69 சதவீதம் மற்றும் 5.59 சதவீதமான அளவில் பேணிக்கொள்ள முடியுமாக இருந்தது.

எரிபொருள் பற்றாக்குறை மற்றும் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட பாரிய மாற்றங்கள், ரஷ்யா-யுக்ரேன் மோதல் ஆகியவற்றின் அடிப்படையில் உலகளாவிய விநியோகத்தில் ஏற்பட்ட தாக்கம் மற்றும் நிதி கட்டமைப்பு ஸ்திரமற்று காணப்பட்ட காரணத்தால் உள்நாட்டு பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாதகமான நிலைமை ஆகியவை கட்டுப்படுத்த முடியாத விடயங்கள் காரணமாக 2022 ஆம் ஆண்டில் இலங்கை பொருளாதாரம் 7.8 வீழ்ச்சியை பதிவு செய்திருந்ததுடன், அது இலங்கை பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாரிய பொருளாதாரம் பின்னடைவாகும். இந்த பொருளாதார பின்னடைவு வரவு செலவு திட்டத்தில் அரச வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பில் தாக்கம் ஏற்படுத்தியதுடன் அது வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை எதிர்பார்த்த மட்டத்தில் பேணுவதற்கு முடியாமைக்கு தாக்கம் அளித்தது. பெயரளவில் செலவினங்கள் உயர்வடைந்தமை மற்றும் நிலவிய பொருளாதார நிலைமை என்னுள் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதமாக பேண முடியாது இருந்தது. எவ்வாறான போதிலும், இடைக்கால சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சி திட்டங்களுடன் வரவு செலவு திட்ட பற்றாக்குறையை 2025 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5

| | | |
|---|---|---|
| | சதவீதம் எனும் மட்டத்தில் அடைந்து கொள்ள எதிர்பார்த்துள்ளது. | |

**3.4 கடன் மீதி அதிகரித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை அதிகரித்தலின் மத்தியில் கடன் பெற்றுக் கொள்ளும் அளவும் அதிகரித்திருந்தது. 2022 ஆண்டு இறுதியளவில் அரசினால் செலுத்த வேண்டிய கடன் மீதியாக ரூபா 27,379 பில்லியனாக அரச நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அம் மீதி தேசிய கடனாக ரூபா 14,360 பில்லியனும் வெளிநாட்டுக் கடனாக ரூபா 13,020 பில்லியனாகவும் காணப்பட்டது. 2021 ஆண்டில் அரச கடன் மீதி ரூபா 16,827 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2022 ஆண்டில் கடன் மீதி ரூபா 10,552 பில்லியனினால் அதாவது 63 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2006 ஆண்டில் காணப்பட்ட ரூபா 2,431 பில்லியனான கடன் மீதி மொத்த தேசிய உற்பத்தியின் 82.72 சதவீதமாக இருந்ததுடன் அது 2022 ஆண்டிறுதியளவில் ரூபா 27,379 பில்லியனாக இருந்ததுடன் அது மொத்த தேசிய உற்பத்தியின் 113.38 சதவீதமாக இருந்தது. மேலும் 2003 இன் 3 இலக்க அரச நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 3(ஊ) பிரிவு பிரகாரம் அரச பொறுப்புக்கள் மொத்த தேசிய உற்பத்தியின் 85 சதவீதத்திலும் குறைவாக இருக்க வேண்டிய போதும் ஏனைய பொறுப்புக்கள் தவிர அரச கடன் பொறுப்பு மாத்திரம் அவ் எல்லையை விஞ்சி 113.38 சதவீதமாக இருந்தது. அந் நிலைமை 2020 மற்றும் 2021 ஆண்டுகளிலும் நிலவியது. | அரச கடன் அதாவது, அரசின் மொத்த பொறுப்புக்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 113 சதவீதம் எனும் எல்லையை விஞ்சியுள்ளதுடன், இதற்காக கடன் வட்டி வீதங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், அந்நிய செலாவணி வீதங்கள் பாரிய அளவில் மாற்றமடைந்த காரணத்தால் இலங்கை ரூபாயின் பெறுமதியானது 2022 ஆம் ஆண்டில் பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்தமை, இலங்கை பொருளாதாரம் 7.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமையால் மொத்த உள்நாட்டு உற்பத்தி மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை மற்றும் 2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு இருதரப்பு கடன் மீள் செலுத்தல்கள் நிறுத்தப்பட்ட காரணத்தால் ஒட்டுமொத்த வெளிநாட்டு கடனின் அளவானது குறைவடையாமை போன்ற காரணங்களால் 2022 ஆம் ஆண்டில் அரசின் கடன் அளவானது உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாக மிகவும் உயர்வான பெறுமதியை கொண்டுள்ளது. | உரிய சட்ட ஏற்பாடுகளுக்கமைய பொறுப்புகள் பேணப்பட வேண்டியமை. |

## 3.5 அரச முதலீடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீண்டுவரும் செலவுகளை தீர்த்துக் கொள்ள போதிய வருமானத்தை திரட்டிக் கொள்ள 2006 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான கால வீச்சளவில் இயலாதிருந்த போதும், அக் கால வீச்சளவினுள் அரச முதலீடாக ரூபா 9,213 பில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அப் பயன்பாட்டிற்கு தேவையான நிதியம் ஒட்டு மொத்தமாக அரச கடன்கள் மூலம் மேற்கொண்டுள்ளதாக நிதிக்கூற்று பகுப்பாய்வின் போது தெளிவாகின்றது. 2022 ஆண்டில் அரச முதலீடாக ரூபா 1,014 பில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. கடந்த ஆண்டில் பயன்படுத்திய அரச முதலீட்டு அளவான ரூபா 790 பில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 224 பில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. 2022 ஆண்டில் அரச முதலீடு ரூபா 1,014 பில்லியன் அளவு காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளுடன் உருவாகும் காசுப் பாய்ச்சலில் காசு செலவிடலின் கீழ் பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீட்டு சுவீகரிப்பாக காட்டப்பட்டிருந்தது. 2006 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை அரச முதலீட்டுக் கூட்டுத் தொகை 9,213 பில்லியன் அளவை காசுப் பாய்ச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீட்டு சுவீகரிப்பாக காட்டப்பட்டிருந்தது. எனினும் 2022 ஆண்டு நிதி நிலைமை கூற்றில் நிதியல்லா சொத்துக்களாக அவற்றில் ரூபா 2,093 பில்லியன் மாத்திரம் சொத்துக்களாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த பௌதீக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீட்டு சுவீகரிப்புக்களின் கூட்டுத் தொகை ரூபா 9,213 பில்லியனில் ரூபா 7,120 | காசுப்பாச்சல் கூற்றில் பௌதீக சொத்துக்களின் நிர்மாணங்கள் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளை சுவீகரித்தல் போன்ற விடயங்களின் கீழ் மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல், மூலதன சொத்துக்களின் சுவீகரிப்பு, இயலளவு அபிவிருத்தி மற்றும் ஏனைய மூலதன செலவினங்கள் ஆகிய அனைத்து விடயங்களும் உள்ளடங்கும். இந்த விடயங்களின் மூலதன சொத்துக்களின் சுவீகரிப்பின் கீழ் செலவினங்கள் மாத்திரம் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் மூலதனமாக்கப்படுகிறது. மேலும், அரசுக்கு சொந்தமான அனைத்து நிதி அல்லாத சொத்துக்களும் இனம் காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது. | முறையான திட்டத்துடன் அரச முதலீடு மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

பில்லியன் அதாவது 77 சதவீதமான சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய இயலாதிருந்தது. மேலும், 2005 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான கால வீச்சளவில் நிதிக்கூற்றுக்களில் நிதியல்லா சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அது 2015 ஆண்டு முதல் கணக்கீடு செய்ய ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**3.6 அரச கடன்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரச கடன் பெற்றுக் கொள்ளும் வேலைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிட்ட கடன் அளவை விஞ்சி கடன் பெற்றுக் கொள்ளல்<br><br>மீளாய்வாண்டினுள் கடன் பெற்றுக் கொள்ளும் வேலைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிட்ட திறைசேரி பிணைமுறி பெறுமதி ரூபா 1,976,800 மில்லயனாக இருந்த போதும், 2022 திசெம்பர் 31 திகதி பெறுமதி ரூபா 2,273,044 மில்லியனான திறைசேரி பிணைமுறிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 396,244 மில்லியனினால் அதாவது 20 சதவீதத்ததால் திட்டமிட்ட அளவை விஞ்சி திறைசேரி பிணைமுறி மூலம் கடன் பெறப்பட்டிருந்தது. கடன் பெற்றுக் கொள்ளும் வேலைத் திட்ட பிரகாரம் வெளிநாட்டு நாணய வங்கி அலகு (FCBU) ஊடாக கடன் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்காத போதும் மீளாய்வாண்டில் உள்ளவாறான கடன் பெற்றுக் கொள்ளல் ரூபா 339 மில்லியனாக இருந்தது. மேலும், கடன் பெற்றுக் கொள்ளும் வேலைத் திட்டத்தின் பிரகாரம், இலங்கை அபிவிருத்தி பிணைமுறைகளின் பெறுமதி ரூபா 66,686 மில்லியனாக காட்டப்பட்ட போதும், ஆண்டிறுதியில் அது ரூபா 67,441 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டினுள் திட்டமிட்ட அளவை விட ரூபா 755 மில்லியனால் அதாவது 1.1 சதவீதத்தினால் இலங்கை அபிவிருத்தி பிணைமுறிகளின் பெறுமதி அதிகரித்திருந்தது. | பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட கடன் பெறும் எல்லையினுள் திணைக்களம் செயற்பட்டுள்ளதுடன், அந்த எல்லையினுள் ஒவ்வொரு கடன் பெறும் உபகரணங்களில் திட்டமிடப்பட்ட எல்லைகளில் தளம்பல்கள் ஏற்பட்டுள்ளது. இதற்கு அடிப்படை காரணமாக அமைந்துள்ளது இலங்கையில் ஒட்டுமொத்த பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக கடன் தரப்படுத்தல் வீழ்ச்சி அடைந்த காரணத்தால் வெளிநாட்டு கடன் பெறல் மட்டுப்படுத்தப்பட்டமை காரணமாக வரவு செலவு திட்ட பற்றாக்குறையை தீர்ப்பதற்கு உள்நாட்டுச் சந்தைக்கு பிரவேசித்து அதிக அளவிலான திறைசேரி பிணைமுறிகளை வெளியிட நேர்ந்தமை ஆகும். மேலும், ஆண்டினுள் வருமானத்தில் தீர்ப்பதற்கு எதிர்பார்த்த கையிருப்பில் உள்ள பட்டியல்கள் மற்றும் வங்கி மேலதிக பற்று, ஆண்டில் | முறையான திட்டமிடலுடன் அரச கடன் பெறுவனவு இடம்பெற வேண்டியமை. |

போதிய வருமானம் கிடைக்காத காரணத்தால் திறைசேரி பிணைமுறிகளை வழங்கியமையின் மூலம் தீர்ப்பதற்கு நேர்ந்தது. எவ்வாறான போதிலும், இதன் காரணமாக ஒட்டுமொத்த கடன் பெறும் எல்லை மீறப்படவில்லை என்பதை விருப்பத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இலங்கை அபிவிருத்தி பிணை முறிகள் (SLDB) மற்றும் வெளிநாட்டு நாணய வங்கி அலகு (FCBU) உள்நாட்டு சந்தையினுள் மற்றும் உள்நாட்டு வங்கிகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட செலாவணி அலகு கடன்களாவதுடன், ஆண்டின் இறுதியில் இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன் ஆண்டினுள் மீள் வழங்களுக்கு (rollover) உரிய முதலீட்டாளர்கள் விருப்பம் தெரிவிப்பார்கள் எனும் எதிர்பார்ப்பில் கடன் பெறுவனறு எதிர்வுகூறல் தயாரிக்கப்பட்டது.

எனினும் மேற்குறிப்பிட்டவாறு பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வெளிநாட்டு மூலங்களில் இருந்தாலும் பெறுவனவுகள் மட்டுப்படுத்தப்பட்டதுடன், அதற்கமைய அந்த முதலீட்டாளர்களால் வெளிநாட்டு பணம் வங்கி அலகுகளின் அடிப்படையில் முதலீடு செய்த தமது பணத்தை மீள முதலீடு செய்வதற்கு இணங்காமையும் அடிப்படையில் வெளிநாட்டு

நாணய வங்கி அலகு கடன் பெறல் இடம்பெறவில்லை. எனினும் கடன் நிகழ்ச்சி திட்டத்தினுள் ரூபா 339 பில்லியன் உள்ளபடியான கடன் பெறுவனவாக பதிவு செய்யப்பட்டுள்ளமைக்கு ஆண்டினுள் செலுத்த வேண்டிய கடன் வட்டியில் ஒரு பகுதியை மூலதனமாக்கல் செய்தமை ஆகும்.
அவ்வாறே, இலங்கை அபிவிருத்தி பிணை முறிகளை திட்டமிட்ட அளவினை விட உள்ளப்படியான பெறுமதி அதிகரித்துள்ள நிலைமைக்கு உண்மையாக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகைக்கு மேல் அதிகமாக ஆண்டினுள் செலுத்த வேண்டிய கடனின் வட்டியில் ஒரு பகுதியை மூலதனமாக்கிய காரணத்தால் ஆகும்.

| | | |
|---|---|---|
| (ஆ) | 2022 ஆண்டு செயலாற்றுகை திட்டத்திற்கு இணங்க மதிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் உள்ளவாறான கொடுப்பனவுகளின் பெறுமதி பின்வருமாறு. | 2022 ஆம் ஆண்டின் தீர்வை மதிப்பீடு 2022 ஏப்ரல் 12ஆம் தேதி வெளியிடப்பட்ட வெளிநாட்டு கடன் சேவை படுத்தல் கொடுப்பனவுகள் தொடர்பிலான இடைக்கால கொள்கை தொடர்பில் அறிவித்தலுடன் ஏற்பட்ட புதிய நிலைமைகளுக்கு இணங்கி பின்னர் மாற்றம் செய்யப்பட்டது. |

**அபிவிரு மதிப் உள்ள வேறுபா வேறுபா**

| த்தி தரப்பினர் | பிடப்பட்ட கொடுப்பனவு 2022 | வாறான கொடுப்பனவு 2022 | டுகள் | டுகள், மதிப்பிடப்பட்ட கொடுப்பனவின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொ. மில்லியன் | ஐ.அ.டொ. மில்லியன் | ஐ.அ.டொ. மில்லியன் | நூற்றுக்கு |
| உலக வங்கி | 482 | 456.2 | (25.8) | (5) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 550 | 741.4 | 191.4 | 35 |
| சீனா | | 101.3 | 101.3 | |
| யப்பான் | | 75.7 | 75.7 | |
| கொரியா | | 4.9 | 4.9 | |
| கிழக்கு ஆசிய நாடுகள் | 50 | 21.4 | (28.6) | (57) |
| தெற்கு ஆசிய நாடுகள் | 835 | 925.5 | 90.5 | 11 |
| ரஸ்யா, அவுஸ்திரேலியா மற்றும் மேற்கத்திய நாடுகள் | 150 | 76 | (74) | (49) |
| ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்கள் | 8 | 11.1 | 3.1 | 39 |
| | ------------ | ------------ | --------- | |
| | **2,075** | **2,413.5** | **338.5** | |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 2022 ஆண்டு மதிப்பிடப்பட்ட கொடுப்பனவுகளின் மொத்த பெறுமதி ஐ.அ.டொ. 2,075 மில்லியனான போதும், உள்ளவாறான கொடுப்பனவுப் பெறுமதி அ.டொ. 2,413.5 மில்லியன் ஆனதில் உள்ளவாறான கொடுப்பனவுப் பெறுமதி, மதிப்பிடப்பட்ட கொடுப்பனவை விட ஐ.அ.டொ. 338.5 மில்லியனால் அதாவது, 16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

மேலே குறிப்பிட்ட இடைக்கால கொள்கை அறிவித்தலுடன் பெரும்பாலான கடன் வழங்கும் நாடுகள் மற்றும் நிறுவனங்களால் தற்போது நடைமுறைப்படுத்த திட்டங்களுக்கான நிதி கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு

தீர்ப்பனவு மதிப்பீடுகளை தயாரிக்கும் போது நடைமுறைக்கு சாத்தியமான வகையில் தயாரிக்கப்பட வேண்டியதுடன், திருத்தங்களை மேற்கொள்ளும் போது மிகவும் நடைமுறை

| | | | |
|---|---|---|---|
| | | முன்மொழியப்பட்ட நிகழ்ச்சி திட்டத்திற்கு இணங்க கடன் மறுசீரமைப்பு இடம்பெற்ற பின்னர் மீண்டும் முன்னர் போன்று செயற்திட்டங்களுக்கான வெளிநாட்டு கடன் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | சாத்தியமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | மதிப்பிடப்பட்ட கொடுப்பனவின் பிரகாரம் சீனா, யப்பான் மற்றும் கொரியாவிடமிருந்து கடன் பெற்றுக் கொள்ள மதிப்பிடாத போதும், உள்ளவாறான கடன் பெற்றுக் கொள்ளல் முறையே ஐ.அ.டொ. 101.3 மில்லியன், ஐ.அ.டொ. 75.7 மில்லியன் மற்றும் ஐ.அ.டொ. 4.9 மில்லியன் பெறுமானமாக இருந்தது. | நிலவிய டொலர் பின்னடைவுக்கு உரிய மாற்றீடாக ஆசியா அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி போன்ற பல் தரப்பு கடன் வழங்கும் நிறுவனங்களால் இலங்கையின் அபிவிருத்தி செயற்கிட்டங்களுக்கு வழங்கிய நிதி வசதிகளில் ஒரு பகுதியை மீண்டும் நோக்கத்திற்கான (repurpose) கொண்டு அந்த நிதியை அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது அதனால் மொத்த மதிப்பீட்டுடன் வேறுபாடு இதன் மூலம் ஏற்பட்டது. | தீர்ப்பனவு மதிப்பீடுகளை தயாரிக்கும் போது நடைமுறைக்கு சாத்தியமான வகையில் தயாரிக்கப்பட வேண்டியதுடன், திருத்தங்களை மேற்கொள்ளும் போது மிகவும் நடைமுறை சாத்தியமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து, தெற்கு ஆசிய நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்கள் ஆகிய நாடுகளிலிருந்து பெற்றுக் கொண்ட உள்ளவாறான கொடுப்பனவு பெறுமதி மதிப்பிடப்பட்ட கொடுப்பனவு ஒப்பிடுகையில், முறையே 35, 11 சதவீதம் மற்றும் 39 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | இந்தியா உட்பட சில நாடுகளால் இலங்கையின் பொருளாதாரத்தில் நிலவிய பின்னடைவை சீர்படுத்துவதற்கு அவசர கடன் உதவி நிகழ்ச்சி திட்டங்களின் மூலம் அத்தியாவசிய இறக்குமதிகளை மேற்கொள்ள தேவையான நிதியினை வழங்க இணங்கின. அந்த தீர்மானம் 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்றமையால் பண கொடுப்பனவு மதிப்பீட்டில் உள்ளபடியான | தீர்ப்பனவு மதிப்பீடுகளை தயாரிக்கும் போது நடைமுறைக்கு சாத்தியமான வகையில் தயாரிக்கப்பட வேண்டியதுடன், திருத்தங்களை மேற்கொள்ளும் போது மிகவும் நடைமுறை சாத்தியமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொடுப்பனவு மாற்றமடைந்தமைக்கு காரணமாக அமைந்தது. | |
| (iv) | உலக வங்கி, கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் ரஸ்யா, அவுஸ்திரேலியா மற்றும் மேற்கத்திய நாடுகளிடமிருந்து எதிர்பார்த்த கடன் முறையே 5.57 சதவீதம் மற்றும் 49 சதவீதத்தால் குறைந்திருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | தீர்ப்பனவு மதிப்பீடுகளை தயாரிக்கும் போது நடைமுறைக்கு சாத்தியமான வகையில் தயாரிக்கப்பட வேண்டியதுடன், திருத்தங்களை மேற்கொள்ளும் போது மிகவும் நடைமுறை சாத்தியமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.7 இலாபம் மற்றும் இலாபப்பங்கு

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்காக 20.02.03.00 கொண்ட இலாப வருமான குறியீட்டிற்கு மற்றும் 20.02.04.00 கொண்ட இலாப வருமான குறியீட்டிற்கு முறையே ரூபா 34.7 பில்லியன் மற்றும் ரூபா 6.3 பில்லியனாக வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் முறையே அவற்றில் ரூபா 22 பில்லியன் மற்றும் ரூபா 6.08 பில்லியன் திரட்ட பொது முயற்ச்சிகள் திணைக்களத்திற்கு முடியுமாக இருந்ததுடன் அது மதிப்பிடப்பட்ட இலாப மற்றும் இலாபப் பங்கு வருமானத்தின் முறையே 63 சதவீதம் மற்றும் 97 சதவீதமானது. | கணக்காய்வு அவததானிப்புடன் இணங்குகின்றேன். | பொது முயற்சிகளின் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்துகை முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | 2022 திசெம்பர் 31 திகதி அரச நிதிக்கூற்றுக்களில் அரசிற்கு சொந்தமான முயற்ச்சிகள் மூலதன பங்களிப்பு ரூபா 2,165,981,657,905 ஆன போதும், அம் முதலீகளிற்காக மீளாய்வாண்டில் | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் கண்காணிக்கப்படும் மொத்த நிறுவனங்களின எண்ணிக்கையில் இலாபமீட்டும் பொது | பொது முயற்சிகளின் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்துகை முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 28,092,481,811 ஆன இலாபம் மற்றும் இலாபப் பங்கு மாத்திரம் கிடைத்திருந்தது. அது மேற்கொண்ட முதலீட்டு பெறுமதியின் 1.3 சதவீதம் ஆனது. | முயற்சிகள் மாத்திரம் வருடாந்த மதிப்பீட்டினை தயாரிக்கும் போது கருத்திற்கொள்ளப்பட்டது. | |
| (iii) 2022 திசெம்பர் 31 திகதி பொது முயற்சிகள் தணைக்களத்தின் மேற்பார்வைக்கு உட்படும் அரசிற்கு சொந்தமான முயற்ச்சிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் எண்ணிக்கை 300 ஆன போதும், அவற்றில் 63 நிறுவனங்களிற்காக வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 47 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் இலாப மற்றும் இலாபப் பங்கு திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் கண்காணிக்கப்படும் மொத்த நிறுவனங்களின எண்ணிக்கையில் இலாபமீட்டும் பொது முயற்சிகள் மாத்திரம் வருடாந்த மதிப்பீட்டினை தயாரிக்கும் போது கருத்திற்கொள்ளப்பட்டது. | பொது முயற்சிகளின் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்துகை முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்தின் 10(5) பிரிவு பிரகாரம் அரச கூட்டுத்தாபனங்களின் தேறிய மிகையை (all sums remaining out of the net surplus revenue) திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதும், அந்த ஏற்பாடுகள் பிரகாரம் மிகை அறிக்கையிட்டுள்ள பொது முயற்ச்சிகளின் அந்த மிகையை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க பொது முயற்ச்சிகள் திணைக்களத்தினால் போதிய செயற்பாடுகளை எடுக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | இலாபங்களின் ஒரு பகுதியேனும் அல்லது முழுமையாக அரச செலவினங்களுக்கு திரண்ட நிதியத்திற்க பெற்றுக்கொள்ளப்படும் போது நிறுவனங்களின் செயற்பட மூலதன தேவைப்பாடு மற்றும் நிறுவனங்களின் எதிர்கால அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிதி பெற்றுக்கொள்ளல் இடம்பெற வேண்டியமை. | பொது முயற்சிகளின் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குறுத்துகை முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.8 திறைசேரி பிணைகள் மற்றும் நிவாரணக் கடிதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியளவில் வெளி நிறுவனங்களிற்கு 239 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 2,793,987 மில்லியன் திறைசேரி பிணைகள் மற்றும் 19 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 114,527 மில்லியனான நிவாரணக் கடிதம் விநியோகிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டினுள் அரசின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம், வெளி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | திறைசேரி பிணைமுறிகள் மற்றும் நிவாரணக் கடிதம் வெளியிடும் நடைமுறை முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்பட வேண்டியமை. |

நிறுவனங்களிற்கு 09 சந்தர்ப்பங்களின் விநியோகித்த ரூபா 45,628 மில்லியன் பெறுமதியான திறைசேரி பிணைகள் மற்றும் 13 சந்தர்ப்பங்களின் விநியோகித்த ரூபா 66,637 மில்லியன் பெறுமதியான நிவாரணக் கடிதம் 2022 திசெம்பர் 31 திகதியளவில் காலாவதியாகியுள்ளமை அவதானிக்கப்பட்டது.